www.padippakam.com

விலை ரூ. 3-

LICENCE No. TN/MS (N) WPP-100

# ஈழ சுதந்திரன்
# ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
௨0௨அ
கார்த்திகை-மார்கழி
டிசம்பர்- 1997
புத்தகம்: 11 இதழ்: 1

∴ போரை நிறுத்தாமல் எப்படிச் சமாதானம்? ∴ சிங்களர்க்கு ஏன் மண்டல சபைகள்?

∴ 1964 எப்படி குடியுரிமைக்கு வரம்பாகும்? ∴ தமிழ் மாகாணத்தைச் சிதைப்பது ஏன்?

∴ தமிழ் மக்களை நம்பாமல் சமாதானத் தீர்வு அங்கு சாத்தியமாகுமா?

## சுயநிர்ணய உரிமை இல்லாமல்
# மாற்றுத் திட்டமா?

### சந்திரிகாவுக்கு ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் வினா

*இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சிறீலங்கா குடியரசுத் தலைவர் சந்திரிகாவால் உருவாக்கப்பட்டு, சிறீலங்கா நாடாளுமன்ற விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள சமாதானத் திட்டம் பற்றி ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன. அந்த அறிக்கை வருமாறு:*

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சந்திரிகா குமாரதுங்க அவர்களால் முன் வைக்கப்பட்ட அதிகாரப் பரவல் திட்டமானது, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையாக 24-10-97 அன்று சிறீலங்கா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு அவர்கள் கேட்டதைவிட அதிகமாகக் கொடுக்கப் போவதாய் திருமதி சந்திரிகாவினால் தம்பட்டமடிக்கப்பட்ட அத்திட்டமானது, கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப் போலச் சிறுத்து நாடாளுமன்ற விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

**இஸ்ரேலைப் பாருங்கள்**

நாடாளுமன்றத்தின் மூலம் அல்லது பெரும்பான்மை (சிங்கள) மக்கள் வாக்குக் கணிப்பின் (Referendum) மூலம் நிறைவேறும் போது அது என்ன நிலையை அடையும் என்று சொல்ல முடியாது. என்றாலும் பல முன்னேற்றகரமான வரவேற்கத்தக்க அம்சங்களும் அதில் உள்ளன என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

ஆனால், சண்டையை நிறுத்தாமல் சமாதானம் என்று சொல்வதை ஏற்பதற்கில்லை. முதலில் போரை நிறுத்திவிட்டு சமாதானம் என்று சொன்னால் தான் அது பொருளுடையதாக இருக்கும் பாலஸ்தீன மக்களுக்கு எதிராகத் தான் நடத்திய போரை நிறுத்திவிட்டுத் தான் இஸ்ரேல் சமாதான முயற்சியில் இறங்கியது என்பதை மறந்துவிடலாகாது.

தீவின் படை முழுவதையும் தமிழர்பகுதியில் கொண்டு போய் குவித்து, தரை-வான்-கடல்வழி தமிழ் மக்கள் மீது குண்டு மாரி பொழிந்து கொண்டு, எந்தத் தமிழரும் தங்கள் சொந்த வீட்டில் வாழ முடியாமல்-சொந்தத் தொழில் செய்ய முடியாமல் அகதியாக அன்றாடம் இடம் விட்டு இடம் பெயர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாத நிலையில், தமிழ்ப்பகுதிக்கு உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைக்காத நிலையில், அவர்களுக்காகத்தான் இத்திட்டம் என்று சொல்வது நகைப்புக் குரியதாகும்.

***சிங்கள மக்கள் எப்போது கேட்டனர்?***

அடுத்து இத்திட்டமானது சிங்களர்களுக்கும் மண்டல சபைகளை உண்டாக்குவதாக, அத்தோடு சேர்த்துத் தமிழர்களுக்கும் அந்த நன்மை கிடைப்பதைப்போலத்தான் அமைந்திருக்கிறது. ஆனால் சிங்கள மக்கள் யாரும் இப்படி மண்டல சபை வேண்டும் என்று கேட்கவில்லை தமிழ் மக்கள் தாங்கள் ஒருதனியான நாட்டினம் என்ற முறையில் தங்களுடைய மொழி, கலை, கலாச்சாரத் தனித்தன்மைகளைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, பௌத்த சிங்களப் பெரும்பான்மை ஆதிக்கத்தால் தங்களுடைய தேசிய அடையாளம் துடைத்தெறியப்படக் கூடிய அபாயத்தின் காரணமாக இலங்கையை சிங்கள-தமிழ் இணைப்பாட்சி நாடாக்க வேண்டும்என்று தமிழ் மக்கள் தான் கோரிக்கை வைத்தனர்.

அந்தக் கோரிக்கை இது வரை காலமும் செவிசாய்க்கப் படாததுடன், இனக்கொலை நடவடிக்கைகள் மூலம் தமிழினத்தையே ஒழித்துக் கட்ட முற்பட்டதாலேயே அது தனி நாட்டுக் கோரிக்கையாக வடிவு கொண்டது. அதையும் சனநாயகப் பூர்வமாக 197 பொதுத் தேர்தலில் தங்களின் ஒருமித்த தீர்ப்பாகத்தான் தமிழ் மக்கள் வெளிப்படுத்தினர். அதையும் சிங்கள ஆட்சியினர் புறக்கணித்து, அரச பயங்கர வாதம் மூலம் அழிக்க முற்பட்டதாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்திற்குத் தள்ளப்பட்டனர்.

**ஏமாற்று நாடகமா?**

ஆக, சிங்களர்—தமிழர் இணைப்பாட்சி என்று இருக்க வேண்டிய திட்டத்தை, தீவு முழுவதற்குமான அதிகாரப் பரவலாக்கல் என்றாக்கி, தமிழர் பிரச்சினை எனத் தனியாக ஒன்றில்லை என்று உலகத்திற்குக் காட்டவும், நாளை இதையே கைவிடுவதாயினும் "நாங்கள் தமிழ் மண்டலத்திற்கு மட்டும் இதைச் செய்யவில்லை; எல்லா மண்டல சபைகளுக்கும் ஒன்று போலத் தான் செய்தோம்" என்று உலகத்தை ஏமாற்றுவதற்குமே இப்படிச் செய்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மூன்றாவதாக எந்த மண்டல சபையும் (Regional Council) பிரிவினை வாதம் முன் வைப்பதைத் தடை செய்வோம் என்பதும் ஏற்றுக்கொள் கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில் கொழும்பு அரசு நினைத்தால் மண்டல சபையின் எந்த

(2-ம் பக்கம் பார்க்க)

---

**ஈழத் தமிழர் ஒத்துழைப்பை பெற**

## சந்திரிகா செய்திருக்கவேண்டியது என்ன?

ரவிபெர்னார்ட்: சிங்களவரையும் திருப்திப்படுத்தியாக வேண்டும். இலங்கையில் அமைதியையும் கொண்டு வரவேண்டும் என்கிற அளவிலே 100 விழுக்காடு இல்லையென்றாலும் 60 விழுக்காடு கிடைத்தாலும் போதும் என்கிற அளவுக்கு விட்டுக் கொடுத்து சந்திரிகாவுக்கு ஒத்துழைக்க ஈழத் தமிழர்கள் தயாராக இருக்கிறார்களா?

சா செ. சந்திரகாசன்: பசி என்று சொல்லி உணவு கேட்பவர்கள் தமிழர்கள். அவர்களுக்கு உணவைக் கொடுப்பது என்று சந்திரிகா முன் வந்தால், அந்த உணவைக் கொடுக்காதே என்று சொல்கிற புத்த பிக்குமார்கள், இனவாதிகளுடைய குரலைக்கேட்டு, இத்தனை ரொட்டிகள்தான் தருவோம்; இதற்கு மேல் கேட்கக்கூடாது என்ற கட்டுப்பாடுகளையெல்லாம் போட்டுக் கொண்டிருக்கலாமா?

தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையை அவர்கள் மறுப்பதை நாங்கள் ஏற்கத் தயாராக இல்லை. தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம். அத்தேசிய இனத்தின் அபிலாசைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள நாங்கள் வசதி செய்து கொடுக்கிறோம் என்று அணுகினால் உதவிக்கரம் நீட்டுவது ஈழத் தமிழர்களுடைய கடமையாக இருந்திருக்கும்.

ஆனால், சிங்களவர்கள் எவ்வளவு விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களோ அதற்கு உட்பட்டுத்தான் ஒரு அரசியல் தீர்வை நான் கொடுப்பேன் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல.

இன்றைக்கு ஈழத் தமிழ் மக்கள் 54 நாடுகளிலே அகதிகளாகச் சென்று இருக்கின்றோம். இரண்டு தலைமுறையினரின் வாழ்க்கையே இப்படி முடிந்து விட்டது. சரி; அடுத்த தலைமுறையினரின் வாழ்க்கையாவது சந்தோசமாக இருக்க வேண்டுமென்றால், ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் மற்ற எல்லாக் குடிமக்களையும் போல சமவுரிமை இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் அபிலாசைகளைப் பெற்றெடுக்கக்கூடிய ஒரு அரசியலமைப்பை-அவர்களுக்குத் தேவையானதை நாங்கள் கொடுப்போம் என்ற அணுகுமுறையுடன் சந்திரிகா இதனை அணுகியிருந்தால் நிச்சயமாக அங்கே ஒத்துழைப்புக்கு இடமுண்டு.

—விஜய் தொலைக்காட்சி நேர்முகம் நிகழ்ச்சியில் 16-11-97

---

**ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்**

www.padippakam.com



''தானத்தின் மிக்க தருமமும் தக்கார்க்கு
ஞானத்தின் மிக்க உசாத்துணையும்-மானம்
அழியா ஒழுக்கத்தின் மிக்க தூவும் இல்லை
பழியாமல் வாழும் திறம்''

-அறநெறிச்சாரம்

(கொடைக்கு மேலான அறமும், தகுதியுடையோருக்கு அறிவை விட மேலான துணையும், சிதையாத ஒழுக்கத்திற்கு மேற்பட்ட மானமும் இல்லை. இவற்றைக் கொண்டு பழிவராமல் வாழும் வாழ்க்கையே திறமானது.)

# தெளிவு

## தமிழக அரசியல் கட்சிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

இலங்கை இனப்பிரச்சினை என்பது இலங்கையை மட்டுமின்றி, இந்தியாவையும் உலுக்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஜெயின் கமிஷன் விசாரணையும் அது தொடர்பான சர்ச்சைகளுமே சான்றுகளாகும்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு நியாயமான முறையில் இறுதித் தீர்வு காணப்படும் வரை இத்தகைய எதிரொலிகள் ஏற்படத்தான் செய்யும்.

ஆனால், அதை வைத்து இந்திய அரசியலில் குழப்பம் ஏறபடுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

எந்த விசாரணை முடிவிலும் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. அதே வேளை கட்சி அரசியலுக்காக இதையும் ஒரு காயாகப் பயன்படுத்தப்படுவது சரியல்ல.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளின் ஆதரவும் அவர்களுக்குத் தேவை. எனவே தங்கள் பிரச்சினையை முன்னிருத்தி எந்தவொரு கட்சி பழிவாங்கப்படுவதையும், ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஆளாக்கப்படுவதையும் அவர்கள் விரும்பவில்லை.

குறிப்பாக தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த ஆதரவில்லாமல், ஒருமித்த அரவணைப்பில்லாமல் இலங்கைத் தமிழர்களின் கண்ணீர் துடைக்கப்பட முடியாது. அந்த ஒற்றுமைக்கு ஜெயின் கமிஷன் அறிக்கையை வைத்து ஊனமேற்படுத்தப்படுவதைத் தவிர்க்கவும் வேண்டும் என்பதுதான் இலங்கைத் தமிழர்களின் ஏகோபித்த வேண்டுகோளாகும்.

ஏனெனில், இலங்கைத் தமிழர்களையிட்டு இந்தியாவில் கட்சிகளிடையே சாதக பாதகங்கள் ஏற்படுவது விரும்பத்தக்கதல்ல.

இங்கே கட்சிப் பிரதிகட்சி அரசியலுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைவிட்டு விட்டு, இலங்கையில் இனப்படுகொலைக்கு ஆளாகி இந்தியாவே தஞ்சம் என்று வந்த ஈழத்தமிழினத்தோடு சம்பந்தப்பட்ட ஒன்றை இலக்காக்குவது, அவர்கள் வேண்டி நிற்கும் அனுதாபத்திற்கும் அரவணைப்புக்கும் எதிரானதாகும்.

ஆகவே, இந்திய அரசியல் கட்சிகளை-குறிப்பாக தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளை ஜெயின் கமிஷன் அறிக்கை முதலிய எதையிட்டும் உங்களையே தஞ்சமென்று வந்திருக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் நெஞ்சங்களைப் புண்ணாக்க வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம்.

## பவளத்தானூர் அகதி முகாமில் பாடசாலைத் திறப்பு விழா

சேலம் மாவட்டம் பவளத்தானூர் குருக்கப்பட்டி ஏரி இலங்கை அகதி முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகக்குழுவின் முதல் பணியாக அறைகுறையாய் இருந்த பாடசாலைக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, அதன் திறப்பு விழா 10-10-97 அன்று ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் ஈரோடு மண்டலப் பொறுப்பாளர் ச. நடேசலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்டத் தொண்டர் பத்மநாதன் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியரும் கலந்து கொண்டனர். மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# மாற்றுத் திட்டமா?...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வொரு நடவடிக்கையையும் பிரிவினை வாதம் என்று கூறி, அதைக் கலைத்துவிட இதனால் இடமேற்படும். அத்தோடு அவசரநிலை (Emergency) சட்டத்தின்கீழ் இந்த ஏற்பாட்டையே செயல்படவிடாமல் நிறுத்தி விட முடியும் அப்படியானால் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிற நன்மைமள் அனைத்தையுமே மத்திய அரசு நினைத்தால் தமிழ் மக்களுக்கு இல்லாமல் செய்துவிட முடியும்.

### வடக்கு-கிழக்கு இணைப்பு

எந்தவொரு சமாதானத் திட்டமும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாக இல்லாவிட்டால் இதனால் பயனில்லை ஒரு நாட்டினத்தின் சுயநிர்ணய உரிமையையைப் பிரிவினை வாதம் என்று எந்தச்சர்வதேச சட்டமும் ஒப்புக் கொள்ளவில்லை.

எடுத்துக்காட்டாக கனடாவில் உள்ள குவிபெக் மாநிலத்திற்கு அந்நாட்டின் அரசியல் சட்டம் பிரிந்து போகும் உரிமையை வழங்கியுள்ளது. அதற்காகப் போராடிய அந்தமக்கள் அந்த உரிமை வாங்கப்பட்டதால்பிரிந்துபோய்விடவில்லை என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான்காவதாக தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகத்தை-ஒன்றுபட்ட தமிழ் மாநிலத்தைச் சிதைக்கும் நோக்கம் இத்திட்டத்தில்இருப்பதைக் கைவிட்டாக வேண்டும்.

1987ஆம் ஆண்டு கைச்சாத்தியப்பட்ட இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் 'வடக்கு கிழக்கு'' தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவ்விரு மாகாண மக்களிடையே வாக்குக் கணிப்பு (Referendum) நடத்திய பிறகே அது உறுதி செய்யப்படும் என்று அந்த ஒப்பந்தத்தில் குறித்திருப்பது கூட ''சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே இந்த ஏற்பாடு.மற்றப்படி அப்படியான வாக்குக் கணிப்பு ஒன்றை நடத்தப் போவதில்லை; வடக்கும் கிழக்கும் இணைந்தது இணைந்ததுதான்'' என்று சிறீலங்கா அரசுத் தரப்பில் சொன்னதற்கேற்பவே அப்போது இந்தியா அதற்கு ஒப்புக் கொண்டது. அதன்படி வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு மாகாண அரசும் ஏற்படுத்தப்பட்டதை மறந்து விடக் கூடாது.

### அநீதியான அரசின்சீர்குலைப்பு

இப்புதியதிட்டமோ அதை நிர்மூலப்படுத்தும் வகையில் ''திருகோணமலை — மட்டக்களப்பு மக்கள் வாக்குக்கணிப்பின் மூலம் இணங்கினால், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா,மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை,மட்டக்களப்பு ஆகிய நிர்வாக மாவட்டங்களை ஒருங்கிணைத்து 'வடக்கு கிழக்கு மண்டலம் என அமைக்கப்படும்'' என்றும்,

அதிலும் 'கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை ஆகிய தேர்தல் தொகுதிகளை இணைத்து அதே மாதிரி ஒரு வாக்குக் கணிப்பின் மூலம் தென்கிழக்கு மண்டலம் அமைக்கப்படும்'' என்றும்,

இல்லையென்றால், ''யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்,வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை இணைத்து வடக்கு மண்டலம்'' என்றும்,

''திருகோணமலை,மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்கள் மற்றும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை ஆகிய தேர்தல்தொகுதிகளை இணைத்து கிழக்கு மண்டலம்'' என்றும்,

அதிலும் அம்பாறையை அம்மக்களின் கருத்துக் கணிப்பிற்கேற்ப ஒன்றில் ஊவா மண்டலத்துடன் சேர்ப்பது அல்லது 'அம்பாறை' என்ற பெயரிலேயே தனி மண்டலமாக வைப்பது என்கிற ரீதியில் மாற்றியமைக்க வழி செய்கிறது.

இது தமிழ்நாட்டினத்தின் பலத்தைச் சின்னாபின்னப் படுத்துவதன்றி வேறாக இருக்க முடியாது.

தமிழ் பேசும் பகுதிக்குள் இஸ்லாமியத் தமிழர்களுக்கு ஒரு தனி நிர்வாகப் பிரிவை ஏற்படுத்துவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அதைச் சாட்டாக வைத்து தமிழினத்தின் பாரம்பரியத் தாயகத்தை துண்டு துண்டாக்குவதை ஏற்க முடியாது.

அதே போல திட்டமிட்ட குடியேற்றத்தால் தமிழர் தாயகத்தில் சிங்களர்கள் கணிசமாகி விட்ட அம்பாறையைத் தனி மண்டலமாக்குவதோ, ஊவா மண்டலத்துடன் இணைப்பதோ ஏற்கத்தக்கதல்ல. இது நியாயமென்றால் சிங்களப் பகுதியில் தமிழர்கள் கணிசமாக வாழ்கின்ற பகுதிகளை ஒன்றில் வடக்கு மண்டலத்துடனோ கிழக்கு மண்டலத்துடனோ இணைக்க வேண்டும் அல்லது அம்பாறையைப் போலத் தனி மண்டலமாக்க வேண்டும்.

### பச்சையான இனவாதம்

இதைச் செய்யாமல் தமிழர் தாயகப் பகுதியைக் கூறு போடுவது பச்சை இனவாத நோக்கமேயாகும்

ஐந்தாவதாக இப்புதிய திட்டம் ''1964ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கையில் நிலையாகத் தங்கியுள்ள, வேறு நாட்டின் குடியுரிமை பெற்றிராத அனைவரும் இலங்கையின் குடியுரிமைக்கு உரித்துடையவர்களே'' என்கிறது.

இது ''இலங்கை விடுதலையடைந்த 1948 ஆம் ஆண்டு அங்கு வாழ்ந்திருந்த அனைவரும், அவர்கள் இப்போது எங்கே இருந்தாலும் இலங்கைக் குடியுரிமைக்கு உரித்துடையவர்களே'' என்று இருக்க வேண்டும்.

பாலஸ்தீனக் குடியுரிமைப் பிரச்சினை இப்படித்தான் தீர்க்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் அமைந்தது 1948ம் ஆண்டுதான் அதற்கு முன்பு அங்கு வாழ்ந்திருந்து வெளியேறியோ அல்லது வெளியேற்றப்பட்டோ, 40 ஆண்டுகள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்த பாலஸ்தீனர்களும், அவர்களுடைய சந்ததியினரும் குடியுரிமைக்கு உரித்துடையவர்கள் என்பது 1993ல் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரும், இன்றையப் பாலஸ்தீன சுயாட்சிப் பகுதியின் தலைவருமான யாசிர் அரபாத் அவர்களே 40 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அந்த மண்ணில் குடி புகுந்திருக்கிறார்.

எனவே இலங்கையிலும் 1948ல் வாழ்ந்திருந்து இன்று அவர்களோ, அவர்களின் சந்ததியினரோ எங்கே வாழ்ந்தபோதும் அவர்கள் இலங்கையின் குடிமக்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இதற்கு மாறாக 1964ஆம் ஆண்டை வரம்பாகக் கொள்வது-

1947ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்களித்து, இலங்கை நாடாளுமன்றத்திற்குத் தங்களின் பிரதிநிதிகளாக அப்போதே 7 பேரைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய (இந்திய வம்சாவளி) மலையகத் தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கிச் சட்டம் செய்த சிங்கள இனவாத அரசியல்வாதிகள் புரிந்த அட்டூழியத்திற்கும், அதன்பின் அவர்களில் ஒரு பகுதியினரை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தியாவின் தலையில் கட்டிய கொடுமைக்கும் அங்கீகாரமளிப்பதாகும். ஆகவே-

### செய்ய வேண்டியவை

1. விடுதலைப் புலிகளைச் சாட்டி சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தி வரும் போரை உடனடியாக நிறுத்த வேண்டும். தமிழ் மக்கள் விவகாரம் வேறு விடுதலைப் புலிகள் விவகாரம் வேறு என்று சிறீலங்கா அரசு சொல்வது உண்மையானால் போரைத் தொடரக் கூடாது.

2. இலங்கையை சிங்களர்-தமிழர் இருநாட்டினத்தின் இணைப்பாட்சி நாடாக அறிவிக்க வேண்டும்.

3. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக் கொள்ளவேண்டும். இலங்கை இனப் பிரச்சினையின் அடிப்படையே இதுதான்.

4. ஏற்கெனவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரியத்தாயகம் என்கிற முறையில் அமைந்த தமிழ் மாகாணத்தை அப்படியே நீடிக்கச் செய்ய வேண்டும். மண்டலசபை ஏற்பாடு தமிழர்களுக்கேயொழிய, சிங்களவர்க்கல்ல. அவர்கள் கேட்கவுமில்லை.

5. இலங்கை சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டு இலங்கையில் வாழ்ந்த இன்று அவர்களின் வாரிசுகள் எங்கே வாழ்ந்தாலும் இலங்கைக் குடிமக்களே என்று அறிவிக்கப்பட வேண்டும்.

இவை ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் சந்திரிகாவின் திட்டம் ஒரு முழுமையான சமாதானத் தீர்வாக இருக்க முடியாது என்பதே நமது நிலைப்பாடாகும்.

எனினும், முந்தைய சமாதானத் தீர்வுத்திட்டங்களோடு ஒப்பிடுகிறபோது இதில் பல முன்னேற்றகரமான அம்சங்கள் இருப்பதையும் மறுக்க முடியாது. ஆனால் அவை உண்மையிலேயே செயலுக்கு வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவ்வாறு ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



## வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே!

முதலில் போரை நிறுத்தி விட்டே சமாதானத் திட்டம் பற்றிப் பேசவேண்டும் என்று கூறும் ஈழத்தமிழர்பாதுகாப்புக் கழக அறிக்கை பாராட்டத் தக்கது. அதே வேளை இலங்கையின் இரு பிரதான சிங்களக் கட்சிகளின் இணக்கம் வரவேற்புக்குரியதென்றும், சந்திரிகாவின் அதிகாரப் பரவல் திட்டம் ஒரு முன்னேற்றம் என்றும் கூறி இருப்பதை ஏற்பதற்கில்லை.

ஏனெனில் தமிழருக்கு எதையும் கொடுக்கக் கூடாது என்பதில் இரு சிங்களக் கட்சிகளும் எப்போதும் இணக்கமாகத் தான் இருந்து வருகின்றன. சந்திரிகாவின் திட்டமோ வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மாநிலம் தமிழரின் பாரம்பரியத் தாயகம் என்கிற அடிப்படைக் கோட்பாட்டை கூட ஏற்கவில்லை

இரா. குமாரமேல், வத்தலக்குண்டு

ஒற்றையாட்சி மாற்றம் நம்பிக்கைக்குரியது என்று சந்திரிகாவின் திட்டத்தை ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் வரவேற்கின்றது. ஆனால், சிங்கள ஆணைக்குழு இன்றைய அரசியல் யாப்பில் கை வைக்கவே கூடாது என்கிறது. இறுதியில் வெற்றி பெறப் போவது சந்திரிகாவின் திட்டமல்ல, சிங்கள ஆணைக் குழுவே.

அப்படியிருக்க ஒருக்காலும் நிறைவேற்றப் போகாத-வெறும் காலம் கடத்தும் உத்தியான சந்திரிகா திட்டத்தை ஏன் வரவேற்க வேண்டும்?

பி. கணேசலிங்கம், மதுரை-1

அமெரிக்க அறிவிப்பும் தமிழர் முன்புள்ள அபாயமும் என்ற ஆசிரியத் தலையங்கம் நன்றாக உள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் போல் ஈழத் தமிழ் விடுதலை இயக்கத்தையும் அமெரிக்கா அங்கீகரிக்கும் நாள் வந்தே தீரும்.

செ. முத்தையா, சங்கரன்கோவில்

'யுத்தத்தை காட்டி மனிதாபிமானப் பணிகளை நிறுத்துவது நியாயமல்ல'' என்ற 'வீரகேசரி' நாளிதழ் தலையங்கத்தை வெளியிட்டிருந்தது சிறப்புக்குரியது. மனித நேயப் பணிகளுக்கு முதலிடம் கொடுப்பதாகப் பீற்றிக் கொள்ளும் அமெரிக்கா போன்ற நாடுகள் இதையாவது கவனத்தில் கொள்ள வேண்டும்.

கே. வி. இராமன், சென்னை-94

சென்ற இதழில் இடம் பெற்ற சு. சிவாவின் கவிதைகள் பிரமாதம்! கவிதைச் சரத்தின் பிற கவிதைகளும் நன்றாக இருந்தன.

தே. மாரிமுத்து, கோவை-3

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் யோசனையைச் செயல்படுத்திப் பார்க்க ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் முயற்சி எடுக்கலாமே!

எம். எஸ். ருத்ரமூர்த்தி, திருச்சி-2

'தியாகம்' சிறுகதை சிறப்பாக இருந்தது. ஆனால் அதன் மொழி நடையில் ஈழத்து வாசனை இல்லை.

எஸ். பிரேமானந்தன், குறிஞ்சிப்பாடி

சமுதாய அடிப்படையிலான மறுவாழ்வின் அவசியத்தை டாக்டர் சுப்பிரமணியம் நடராசா விளக்கி இருந்த விதம் அருமையிலும் அருமை.

வி. சற்குணநாதன், ஈரோடு

கொழும்பில் தமிழர் வீடுகளை புல்டோசர் கொண்டு இடிக்கும் கொடுமையைக் கண்ட பின்பும் சந்திரிகாவை சமாதான விரும்பி என்றால் நகைப்புக்குரியது.

சி. ஆர். மரியநேசன், நெல்லை-1

'ஒரு குறளை உணர்வோம்' பகுதியில் 'எய்யாமை' என்ற சொல்லைக் கொண்டு 'அருகோ' கூறியுள்ள விளக்கம் புதுமையாக இருந்தது.

அரு. அருமைநாதன், சென்னை-11

''மக்கள் பிரதிநிதிகளின் நிருவாகத்தில் இராணுவம் தலையிட அனுமதிக்க முடியாது'' என்ற மட்டக்களப்பு மாநகர சபையின் குரல் வரவேற்கத் தக்கது. இலங்கையில் உள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் இவ்விதம் குரல் எழுப்பினால், இராணுவத்தின் கெடுபிடி குறைய வாய்ப்புண்டு

ஜோசப். அன்ரனி, புதுச்சேரி

# ஐ.தே.க. ஆதரவு தர மறுத்தால மார்ச்சில் சவர்ஜன வாக்கெடுப்பு

## திட்டமிடல், பாராளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை கூறுகிறார்

'இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணு முகமாக முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லுமேயொழிய பின்வாங்க போவதில்லை'' என்று திட்ட அமுலாக்கல் பாராளு மன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை தெரிவித்தார்.

இது விஷயத்தில் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார் என்றும் அவர் சொன்னார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகளை அரசாங்கம் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்து விட்டது. இதில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### ஐ.தே.க.வின் நிலை நியாயமானதல்ல

இதில் சில யோசனைகளுக்கு ஐ.தே.க. இன்னமும் தமது இணக்கப்பாட்டை தெரிவிக்கவில்லை. அது பற்றி ஆராயப்பட வேண்டுமென்று ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

பாராளு மன்ற தெரிவுக் குழு 73 தடவைகள் கூடி தீர்வு யோசனைகள் பற்றி ஆராய்ந்துள்ளது. சுமார் இரண்டரை வருட காலமாக தெரிவுக்குழு யோசனைகளை ஆராய்ந்திருக்கிறது. இருந்தும் ஐ.தே.க. மேலும், கால அவகாசம் கேட்கிறது இது நியாயமான செயலாகத் தெரியவில்லை.

இருந்தும் ஐ.தே.க. மாற்றுயோசனைகளை சமர்ப்பித்தால் அரசு பரிசீலிக்கத் தயார் என்றே நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

### சர்வஜன வாக்கெடுப்பு

இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டுமென்று ஐ.தே.க. மனதார விரும்பினால் நிச்சயம் ஐ.தே.க.வின் தலைமைப் பீடம் அரசின் தீர்வு யோசனைகளுக்கு ஆதரவு தரவேண்டும். ஆதரவு தராமல் பிரச்சினையை இழுத்தடிக்க விரும்பினால் அரசுக்கு வேறுவழி கிடையாது.

தீர்வு யோசனைகளை மக்கள் முன் எடுத்துச் சென்று அவர்களின் அங்கீகாரத்தைப் பெறுவதே அரசுக்குள்ள மாற்று வழியாகும்.

எனவே இந்த சர்வஜன வாக்கெடுப்பை வடகிழக்கு உட்பட இலங்கை முழுவதிலும் நடத்துவோம். பெரும்பாலும் மார்ச் முதல் வாரப் பகுதியில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவே திட்டமிட்டு வருகிறோம்.

### சர்வஜன வாக்கெடுப்பு

இந்த சர்வஜன வாக்கெடுப்பு ஒரு கருத்துக் கணிப்பாகவேஇருக்கும். கட்டுப்பாடுடைய சர்வஜன வாக்கெடுப்பாக இருக்காது.

இன்று அமுலிலுள்ள அரசியலமைப்பின்படி இத்தகைய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நாங்கள் நடத்தலாம். அதற்கு அரசியலமைப்புச் சட்டத்தில் இடமிருக்கிறது.

இது ஒரு தேசியப் பிரச்சினை. எனவே கருத்துக் கணிப்பை நாடளாவிய ரீதியில் எங்களால் நடத்த முடியும். இதனால் எதிர்த்துயாரும் உயர்நீதிமன்றங்களில் வழக்கு போட்டாலும் அது தோல்வியிலேயே முடியும்.

தீர்வு யோசனைகளுக்கு எதிராக ஒரு சில "சக்திகள் சிங்களவர் மத்தியில் சென்று பிரசாரம் செய்கின்றனர் ஆனால் அது வெற்றியளிக்கவில்லை.

எமது தீர்வு யோசனைகளுக்கு நாடெங்கும் ஆதரவு பெருகி வருகிறது எனவே சர்வஜன வாக்கெடுப்பு நடந்தால் அதில் மக்களின் பூரண ஆதரவு கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

சர்வஜன வாக்கெடுப்பில் தீர்வு யோசனைகளை மக்கள் நிராகரிப்பார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை தெரிவித்தார்.

---

## ஈழத்தமிழன்

ஒரு புல்லாங்குழல்
யுத்த நெருப்பில்
விறகாகிறது!
அவன்தான் ஈழத்துத்
தமிழன்!

கே. லதா
இ.அ. முகாம்
கொண்டம்

---


## அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

அரிய வரலாற்றுக் களஞ்சியம்

# தந்தை செல்வா

ஈழத்துக்காந்தி, தமிழீழத் தந்தை சா.ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர்

பிரபல ஈழத்து எழுத்தாளர்

த. சபா ரத்தினம்

எழுதுகிறார்.

படிக்கவும் பாதுகாக்கவுமான பயனுள்ள தொடர்.

தவறாது வாங்கிப் படிக்க இப்போதே தயாராவீர்!


படிப்பகம்

www.padippakam.com



# வவுனியா முகாம்களில் வதைபடும் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் துயர்!

- வி ரி கதிர்காமநாதன் -

வவுனியாவில் உள்ள 14 நலன்புரி நிலையங்களிலும் பல வந்தமாகத் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இடம் பெயர்ந்த மக்கள் அக்டோபர் 22-ம் திகதியுடன் ஒரு வருடத்தைப் பூர்த்தியாக்கியுள்ளனர்.

மிகுந்த சிரமங்கள், துயரங்கள் மத்தியில் இம்முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இம்மக்களை விடுவிக்கக் கோரும் குரல்கள் தற்போது உச்சக்கட்டத்தில் எதிரொலிக்க தொடங்கியுள்ளன. இது தொடர்பாக கடந்த 13ஆம் திகதி வவுனியா நகரமே ஸ்தம்பிதமடையக் கூடிய வகையில் தமிழ் ஈழ விடுதலைக் கழகத்தினரால் ஹர்த்தால் ஒன்று நடத்தப்பட்டது. அதற்கு மறுநாள் 14-ம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினரால் வவுனியாவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இந்த இரு நாட்களில் நடத்தப்பட்ட ஹர்த்தாலின் போதும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போதும் வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை விடுதலை செய்யவேண்டும் என்பது முதல் கோரிக்கையாக முன் வைக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள 14 நலன்புரி நிலையங்களில் சுமார் 4 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். ஒரு பாவமும் அறியாத இந்த இடம் பெயர்ந்த மக்களில் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள். சிறுமிகள், குழந்தைகள் வயோதிபர்கள் என பல தரப்பட்டவர்களும் சொல்லொணாத் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இம்மக்களின் பெரும்பான்மையானோர் யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களையும் சேர்ந்தவர்கள்.

### வாழ்வா? சாவா? எனும் மக்கள் நிலை

யாழ் மாவட்டத்தில் சகல வசதிகளுடனும் வாழ்ந்த இவர்கள் இடம் பெயர்ந்து, இடம் பெயர்ந்து மனவிரக்தியுற்ற நிலையில் பணத்தையும் இழந்து இன்று வாழ்வா? சாவா? என்ற நிலையில் இந்த நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சகல நலன்புரி நிலையங்களிலும் அமைக்கப்பட்ட தற்காலிக மண்டபங்களில் இந்தக் குடும்பங்களுக்கு தலா 100 சதுர அடி நிலம் வழங்கப்பட்டுள்ளது. இந்த 100 அடி நிலத்திலேயே இவர்கள் தமது சகல விதமான தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

நெலுக்குளம் நலன்புரி நிலையத்தில் கிடுகுகளினால் வேயப்பட்ட மண்டபம் ஒன்று இருக்கின்றது. கிடுகுகள் உக்கிய நிலையில் இடை இடையே பெய்யும் மழையினால் ஒழுகத் தொடங்கியது. இதனால் இந்த மண்டபத்தில் வசிக்கின்ற மக்கள் பழுதடைந்த கூடாரச் சீலையை கிடுகளுக்கு மேலே போட்டிருக்கின்றனர். இந்த பழுதடைந்த சீலை பெரிதாகப் பெய்ய இருக்கும் பருவ மழைக்கு தாக்குப் பிடிக்குமா?

சகல நல்ன்புரி நிலையங்களிலும் சிரங்கு, சொறி போன்ற தொற்று நோய்களினால் பலர் பீடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் போஷாக்கு இல்லாமையே என தெரிய வந்துள்ளது. இன்று நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற மக்கள் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை கொழும்பு போன்ற இடங்களில் வசிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். சில இளைஞாகள், யுவதிகள் தாய் தந்தையர் இன்றி தனிமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

### வேதனையிலும் பொலிசாரின் விசாரணைத் தொல்லைகள்

இங்குள்ள அநேகமான குடும்பங்களுக்கும் தனிமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற இளைஞர்கள், யுவதிகளுக்கும் இரகசிய பொலிஸாரினால் விசாரணைகள், பொலிஸாரின் எம்.ஓ. கிளையினரின் விசாரணைகள் முடிவடைந்த நிலையிலும் அவர்கள் தாங்கள் விருப்பம் தெரிவித்த இடங்களுக்கு செல்ல முடியாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் பொலிஸ் அதிகாரிகள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இந்த நலன்புரி நிலையங்களில் ஒரு வருடமாக வாழ்ந்து வருகின்ற மக்கள் பல பொலிஸாரையும், அதிகாரிகளையும் கண்டு கண்டு தமது நிலைமையை எடுத்துக் கூறிக்கூறி தமக்கு அலுத்துப் போய் விட்டதாக தெரிவிக்கின்றனர்.

இளைஞர்கள், யுவதிகள் நலன்புரி நிலையங்களில் விரக்தியடைந்த நிலைமையில் காணப்படுகின்றனர். வெளிக்குளம் நலன்புரி நிலையத்தில் அண்மையில் படித்த அழகிய யுவதி ஒருவர் மனநோய்க்கு ஆளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நெலுக்குளம் நலன்புரி நிலையத்திற்கு முன்பாக கடந்த மாதம் இடம் பெற்ற லொறி விபத்தில் அழகிய மாணவி ஒருவர் உயிரிழந்தார். இரண்டு மாணவிகள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரு மாணவியின் கால் துண்டிக்கப்பட வேண்டிய நிலையில் இருப்பதாக தெரிய வருகின்றது. நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வந்த இவர்கள் இந்த நிலைமைக்கு ஆளாகியிருப்பது ஏன்?

நலன்புரி நிலையங்களில் இருந்து தம்மை விடுவிப்பது துரிதகதியில் நடைபெற வேண்டுமென இம்மக்கள் கோரிக்கை விடுகின்றனர். இன்று 14 நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் அண்மையில் நடைபெற்ற ஹர்த்தால், ஆர்ப்பட்ட ஊர்வலம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட குரல் ஆகியவற்றினால் தமக்கு மிக விரைவில் விடுதலை கிடைக்கும் எனஎதிர்பார்க்கின்றனர்.

# தேடுதலின் போர்வையில் அப்பாவித்தமிழர்களை துன்புறுத்துவதை நிறுத்துங்கள்

ஈ.பி.ஆர்.எல்.எப். கோரிக்கை

தேசவிரோதிகளிடமிருந்து இந்த நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் நோக்கமெனக் கூறிக் கொண்டு ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர். எல். எப்.) வவுனியா மாவட்டச் செளலாளர் என்.சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பாரிய இராணுவ தேடுதல் நடவடிக்கை குறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### தலைநகரா? தண்டனை நகரா?

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

இந்த நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்றுவரையும் தமிழ்பேசும் மக்கள் சொல்லொணாத துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். இந்த அடிப்படை உண்மையை அரசானது முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்த முடிவற்ற நெருக்குவாரங்களிலிருந்து இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் மக்களினால் மீளமுடியாமல் உள்ளது.

தங்களின் அத்தியாவசியத் தேவைகளை முடித்துக் கொள்ளும் நோக்கத்தோடு கொழும்பு செல்கின்ற தமிழ் மக்கள் அங்குள்ள பாதுகாப்பு நெருக்குதல் நடவடிக்கைகளினால் மிகுந்த கவலைக்கும் வேதனைக்கும் உள்ளாகி இருக்கின்றார்கள்.

### அப்பாவிகளை விடுதலை செய்

இந்த நாட்டின் இறைமையைச் சீர்குலைக்கும் தீய சக்திகளை மக்களிடமிருந்து அன்னியப்படுத்துவதற்கு அரசு அக்கறை காட்டுகின்ற அதே வேளையில் இதுபோன்ற செயற்பாடுகள் மேன்மேலும் தீய சக்திகளுக்கே இசைவாக அமையும் என்பதை அரசு புரியாமல் நடந்துகொள்கின்றது.

ஈ. பி. ஆர். எல். எப். கோரிக்கை காக்கப்படுவதற்கும் அவர்கள் கௌரவமாக வாழ்வதற்கும் பிற சமூகத்தவருடன் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும் ஆட்சியாளர்களே வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

இலங்கை அரசியலைப் பொறுத்தமட்டில் சிறுபான்மையினரின் அனுபவங்கள் வேதனையான முடிவுகளையே பிரசவித்துள்ளன. கொழும்புத் தேடுதலின்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.




## இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

வாங்கோ சுப்பையாண்ணை! என்ன உங்களைப் போன முறை காணேல்ல.

என்ன தம்பி! மழை ஒரு பக்கம் வெள்ளம் ஒரு பக்கம் அதுதான் வரமுடியேல்ல

இப்ப கூட கஷ்டப்பட்டுத் தான் வாறன்.

தம்பி! இப்ப யாழ்ப்பாணத்தில பல பேருக்கு இரண்டு சக்கர சைக்கிளை விட மூன்று சக்கர சைக்கின்தான் அதிகமாத் தேவைப்படுதாம்.

ஏனெண்டுகேட்கிறியளே!

இப்ப மிதிவெடிச் சம்பவங்கள் அதிகமாக பண்டத்தரிப்பு, மல்லாவி, பகுதிகளிலே நடைபெறுகிறதாம்.

கால் இழந்த பலர் தமது ஜீவனாம்ச வாழ்க்கையை கொண்டு போவதற்காகவே மூன்று சைக்கிள் வண்டிகளை கொழும்பில் இருந்து தருவிக்கிறார்களாம்.

ஃ ஃ ஃ

காலத்தே பயிர் செய்ய வேணும் எண்டு படிச்சிருக்கிய மோன!

அது மாதிரி இப்ப பல பேருக்கு சிங்கள மொழி சொல்லிக் கொடுக்கிறதுக்கு யாழ்ப்பாணத்தில பலபேர் உருவாகி இருக்கினம். பேப்பரில விளம்பரமும் எல்லே கொடுக்கினமாம்.

எங்க போய் முடியப் போகுதோ

ஃ ஃ ஃ

வவுனியாவிலையும் முல்லைத் தீவிலும் போர் ஓயவில்லை எண்டு ஒரு புறம் இருக்க, யாழ்ப்பாணத்தில இருந்த பல சென்றி முகாம்கள் அகற்றப்பட்டுவிட்டனவாம்.

சென்றி முகாம் எடுக்கப்பட்ட சந்தோஷம் ஒரு புறம் மக்களுக்கு இருந்தாலும் மறு புறம் ஒருவிதப் பயம் கலந்த பீதியோடதான் இருக்கினமாம்.

உனக்கு விளங்கி இருக்கும் என நினைக்கிறன்.

யாழ்ப்பாணத்தில நிலமை சுமுகமாக இருக்கிறதாக பத்திரிகைகளும், வானொலியிலும் செய்திகள் வரத்தொடங்க தமிழ் நாட்டை நோக்கிய பல அகதிகள் யாழ்குடாநாட்டை நோக்கிய படகுகளில் பயணம் செய்கிறார்களாம்.

''இக்கரை மாட்டுக்குஅக்கரை பச்சைதானே''தம்பி!

இன்னுமொண்டையும் சொல்லுறன் கேளும் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை இலங்கையில் கடந்த காலங்களில் இடம் பெற்ற விமான விபத்துக்களுக்கு காரணம் விமானப்படைத் தளபதியே என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. விசாரணை நடத்திய குழுவே இந்த அறிக்கையை கொடுத்துள்ளதாம்.

எப்படி இருக்கு

-ர.ரா.சிங்கம்

படிப்பகம்

# ஈழத்தமிழர் விடயத்தில் எல்லாத் தமிழர்களும் இணைந்து போராடி வருகிறோம்

## தென்னாப்பிரிக்கத் தமிழர் தலைவர் கண்ணன் செவ்வி!

தென்னாப்பிரிக்கா வாழ் தமிழர்கள் ஈழத்தமிழர் விடயத்தில் என்றும் இணைந்து நின்றே போராடி வருகிறோம் என்று, தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்துள்ள தமிழர்தலைவர்களில் ஒருவரான திரு.கண்ணன் கூறியுள்ளார்.

தென் ஆப்பிரிக்க தமிழர் தலைவர் கண்ணன் (படையாச்சி) சென்னை வந்தார். அவர் அளித்த சிறப்புப்பேட்டி வருமாறு :

கேள்வி : தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் எவ்வளவு பேர் உள்ளனர்? அதில் தமிழர்கள் எவ்வளவு பேர் உள்ளனர்?

பதில் : தென்னாப்பிரிக்காவில் ஏறத்தாழ ஒரு லட்சம் இந்தியர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள். ஏறத்தாழ 60ஆயிரம் தமிழர்கள் உள்ளனர். அரசியல் மற்றும் பல நிர்வாகங்களில் தமிழர்கள் உயர்ந்த நிலையில் உள்ளனர். அமைச்சரவையில் தமிழர் ஒருவர் இடம்பெற்றுள்ளார். அவரது பெயர் ஜெய்நாயுடு. நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளில் 15 இந்தியர்கள் உள்ளனர். இவர்களில் எட்டுப் பேர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கே : வேலை வாய்ப்பு, கல்வி போன்றவற்றில் சிறுபான்மையினர் என்ற முறையில் தமிழர்களுக்கு ஏதேனும் சலுகைகள் உண்டா?

ப : மொழி, மதம் போன்றவற்றில் அனைத்து நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் சம அந்தஸ்தும், கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் பல நிர்வாகங்களில் அனைவருக்கும் சம உரிமையும் வழங்கப் படுகின்றது.

### தமிழ்க்கல்வி

கே : நெல்சன் மண்டேலா அதிபர் பதவி ஏற்ற பின்னர் தமிழர் நிலை என்ன?

ப : மகாத்மா காந்தி காலத்தில் இருந்து கறுப்பர் இனத்தவரின் விடுதலைப் போராட்டத்தில் தில்லையாடி வள்ளியம்மை உட்பட ஏராளமான தமிழர்கள் பங்குகொண்டனர். இதனால் தென்னாப்பிரிக்க மக்களிடையே தமிழர்களின் மதிப்பு உயர்ந்துள்ளது. அதிபர் நெல்சன் மண்டேலா தமிழர்களின் பால் அன்பு கொண்டுள்ளார் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

கே : பள்ளிகளில் தமிழ் மொழி கற்றுக் கொடுக்கப்படுகின்றதா?

ப : பள்ளிகளில் தமிழ் மொழி மட்டுமின்றி தேவாரம், திருவாசகம் போன்றவையும், தமிழ் இசையும், நடனமும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

கே : தமிழர்களுக்கென தனியாக சங்கங்கள் உள்ளனவா? அவற்றின் பணி என்ன?

ப : தென்னாப்பிரிக்கத் தமிழர் கூட்டமைப்பின் கீழ் 21 தமிழர் சங்கங்கள் உள்ளன. பாப்பனோனி என்ற தமிழ் வாரியத்தின் துணைத் தலைவராக நான் செயல்பட்டு வருகின்றேன். தமிழ் தமிழ்மொழி கலாச்சாரம் இவற்றினை புதிய தலைமுறையினர் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கில் செயல்படுகின்றோம்.

### தமிழர் பொருளாதார நிலை

கே : தமிழர்களின் பொருளாதார நிலைமை அங்கு எப்படி உள்ளது?

ப : அங்குள்ள தமிழர்களில் 75 சதவீதம் பேர் பொருளாதார நிலையில் முன்னேற்றம் கண்டு நல்லநிலையில் உள்ளனர். 40 சதவீதம் பேர் வர்த்தகம், போக்குவரத்து மற்றும் இரும்பு, ஆடைகள் போன்றவைகளை உற்பத்தி செய்யும் முன்னேறியுள்ளனர். 20 சதவீதம் பேர் பல்வேறு இடங்களில் வேலை செய்து பிழைக்கின்றனர்.

கே : பண்டிகைகள் கொண்டாடுவது உண்டா? தமிழ் மொழிக்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவம் என்ன?

ப :தமிழ்நாட்டு வழக்கப்படி எல்லாப் பண்டிகையும் கொண்டாடுகின்றோம். எங்களது இல்லங்களுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைத்தான் சூட்டுகின்றோம். உதாரணமாக என் இல்லத்தின் பெயர் "தமிழகம்" தமிழ் நூல்கள், தமிழ்த் திரைப்படம், பாடல்கள், தமிழ்ச் செய்தித்தாள்கள் போன்றவற்றை வாங்குகின்றோம். சிலர் தங்களது வாரிசுகளைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி கலாச்சேத்ரா, இசைக் கல்லூரி போன்றவற்றில் கற்க வைக்கின்றனர்.

கே : தென் ஆப்பிரிக்காவின் ஆட்சிமொழி எது?

ப : மொத்தம் பதினோரு மொழிகள் அதிகப்பூர்வ ஆட்சிமொழிகளாக உள்ளன. ஆப்பிரிக்க மொழிகள், ஆங்கிலம் போன்றவை இதில் அடங்கும். பொதுவாக அனைவராலும் பேசக்கூடிய மொழியாக ஆங்கிலம் உள்ளது.

### ஈழ ஆதரவு நிலை

கே : தென்னாப்பிரிக்காவில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு ஏதேனும் இடையூறுகள் உள்ளதா? தமிழர்கள் என்ற முறையில் நீங்கள் அவர்களுக்கு செய்யும் உதவிகள் என்ன?

ப : அங்கு ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை குறைவுதான். தமிழ் ஈழ ஒருங்கிணைப்பு குழு என்ற அமைப்பின் கீழ் 3 சங்கங்கள் உள்ளன. ஈழத் தமிழர்களுக்கு அரசினால் எந்தத் தடையும்; இடையூறும் கிடையாது. அதனையும் மீறி அவர்களுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டால் நாங்கள் அவர்களுடன் இணைந்து போராடுகின்றோம். தென்னாப்பிரிக்கத் துணை வெளிநாட்டு அமைச்சரையும், பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டியிருக்கின்றோம்.

கே : ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உங்கள் நாட்டு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

ப: தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் ஆட்சி நடந்தபோது சிங்கள அரசுக்கு ஆயுதங்கள் வழங்கியது. ஆனால் நெல்சன் மண்டேலா அதிபராகப் பதவியேற்றபின் தமிழர்கள் கோரிக்கையை ஏற்று சிங்கள அரசுக்கு ஆயுதம் விநியோகம் செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

கே : தமிழ்நாட்டைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப : முஸ்லீம் மக்களுக்கு மெக்கா மதினா புனிதஸ்தலம் போல உலகின் பல நாடுகளிலும் பரவி உள்ள தமிழர்களுக்கு தமிழகம் கலாச்சார புண்ணிய பூமியாகும். இங்கு ஒரு முறை வந்தால் மீண்டும் மீண்டும் வரத்தூண்டுகின்றது. தமிழ் கலாச்சாரம், மற்றும் பண்பாடு பற்றி மேலும் மேலும் தெரிந்துகொள்ள என்னைப் போன்ற வெளிநாட்டுத்தமிழர்கள் ஆர்வமாய் உள்ளனர். இதற்கு தமிழக அரசு உதவி செய்யவேண்டும். இதுவே என் விருப்பமும் கூட இவ்வாறு அவர் கூறினார்.

நன்றி: 'தென்செய்தி'

## சி.டி.பி.யினரால் கைதானவரை விடுதலை செய்ய மன்று உத்தரவு!

காரணம் எதுவும் கூறப்படாது சந்தேகத்தின் பேரில் கைதாகி சி.டி.பி. பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஹோட்டல் வீதி கல்கிசையைச்சேர்ந்த கருப்பையா பரமேஸ்வரனை விடுதலை செய்ய உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இவரது விடுதலை தொடர்பாக சட்டத்தரணி அப்பாத்துரை வினாயகமூர்த்தி தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கிலேயே நீதியரசர்கள் ஜி.பி.எஸ் டி. சில்வா, பிரியந்த பெரேரா, ஆனந்த குமாரசுவாமி ஆகியோர் இந்த உத்தரவை பிறப்பித்தனர்.

மனுதாரர் வினாயகமூர்த்தி மனுவில் சி.டி.பி. இயக்குனர், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

பரமேஸ்வரனின் கைதும் தடுத்து வைப்பும் சட்ட விரோதமானது பிரதிவாதிகள் 13 (1) 13 (2) பிரிவுகளை மீறிவிட்டதாக உத்தரவிடுவதோடு விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர் கோரியிருந்தார்.

கடந்த 12ஆம் திகதி பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ் டி. சில்வா நீதியரசர்கள் பிரியந்த பெரேரா, ஆனந்தகுமாரசாமி ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டவாதி டிரட்நாயக்கா தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபரான பரமேஸ்வரனை விடுதலை செய்வதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்தார்.

இவரை உடனேயும் விடுதலை செய்யும்படி முதல் பிரதிவாதிக்கும் கொழும்பு மகசீன் சிறைச்சாலை அத்தியட்சருக்கும் பணிப்புரை விடுக்கப் பட்டது.

## பா.ஜ.க. தலைவர் அத்வானியிடம் பணிந்தார் ரணில் விக்கிரமசிங்க!

### தமிழர் படுகொலைக்கு அத்வானி கண்டனம்

இலங்கையில் சந்திரிகா அரசும் அதற்கு முன்பு இருந்த அரசுகளும் தமிழர்களை பூண்டோடு அழிக்க வேண்டும் என்று கங்கணம்கட்டிச்செயல்பட்டு வருகின்றன.

ஈழத்தில் சிங்கள இராணுவத்திடமிருந்து தமிழர்களை தமிழ்ப் போராளிகள் காத்து வருகின்றனர் ஆனால்புலிகள் பெயரைச் சொல்லி சிங்கள அரசுகள் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருவதை உலகம் உணர்ந்து வருகிறது. முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கே இந்தியத் தலைவர்களைச் சந்திக்க டில்லி வந்துள்ளார். டெல்லியில் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல். கே. அத்வானியைச் சந்தித்துப் பேசினார்.

புலிகள் பற்றி அவர் கூறியதும், அத்வானி "எப்போது பார்த்தாலும் புலிகள்பற்றியே பேசுகிறீர்கள். ஆனால் அங்குள்ள தமிழ் மக்களுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?"

அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள். தொடர்ந்து இராணுவத் தாக்குதல் நடக்கிறது. இதைத் தடுக்க நீங்கள் என்ன செய்தீர்கள்? இலங்கையின்வடக்கு கிழக்கு மாநிலங்கள் நிரந்தரமாகப் பிணைக்கப்பட வேண்டும் என்று அத்வானி கூறினார்.

இதனால் ஏதும் பேச முடியாத நிலையில் ரணில் தமிழர்கள் காக்கப்பட வேண்டும் என்று பாரதீய ஜனதா கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினார்.

## யாழ். நிருபர் கொழும்பில் கைது

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் பத்திரிகை ஒன்றின் வவுனியா நிருபரான ராஜ்குமார் கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து விமானப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

விமானப் படையினர் விசாரணை செய்த போது உரிய முறையில் அவர் பதில் அளிக்கவில்லை எனக் கூறப்பட்டது. அனுமதியின்றி கலதாரி ஹோட்டலைப் படம் பிடித்ததாக அவர் மேல் குற்றம் சாற்றப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் பெட்றிக் பெரேரா தெரிவித்தார்.


"ஈழ சுதந்திரன்"

மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரு 30-00
வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10
அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாகி
ஈழசுதந்திரன்
14, சேட் காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி
எழும்பூர், சென்னை-8.

www.padippakam.com



# உதயசூரியன் பார்வையிலே...

## (ஓர் நடைச்சித்திரம்)

செல்வி சித்திரா தேவசகாயம்
(இ. அ முகாம், போகநல்லூர்)

காலைச் சூரியனை திடீரெனக் கவிழ்த்தன வானத்தில் கூடிய கருமேகக் கூட்டங்கள். விளைவு மழை லேசாகத் தொடங்கியது. அந்த முகாமில் பெரும்பாலான வீடுகளில் சிறிய தூறலுக்கே தாக்குப் பிடிக்க முடியாத தார் சீட்டுக்கள். அதன் வழியாக மழைத் தண்ணீர் வீட்டினுள் பரவலாக பன்னீர் சிந்திக் கொண்டிருந்தது.

செல்வி மளமளவென்று ராக்கையில் இருந்த சட்டி, முட்டி கோப்பைகளை எடுத்து தண்ணீர் சிந்தும் இடங்களில் வைத்துவிட்டு அடுத்தபடியாக வீட்டில் இருக்கும் முக்கிய பெட்டி படுக்கைகளை மழை அதிகமானால்ஒழுகாது என்று தெரிந்த மூலைமுடுக்குகளில் ஒதுக்க ஆரம்பித்தபடி தன்னை அறியாமல் வாய் விட்டு படபடப்பாய்வேண்டிக் கொண்டாள். ''கடவுளே! மழை உரத்துப் பெய்யாமல் அப்படியே நின்றிட வேண்டும் ஆண்டவனே!''

செல்வியின் வேண்டுதல் பக்கத்தில் நின்றிருந்த அவள் மகள் சுதாவின் காதில் பளிச்சென விழுந்ததும் தாயை ஆச்சரியமாய் பார்த்துக் கேட்டாள் சுதா.

''அம்மா அன்றைக்கு ஒரு நாள் நாங்கள் கோயிலுக்கு போயிருந்தபோது மழை பெய்தால் தான் நாட்டுக்கு நல்லது. சாமியிடம் நல்லமழை பெய்ய வேணும் என்று வேண்டிக்கொள் என்று எனக்கு சொன்னீங்களே! இப்ப நீங்களே கடவுளிடம் மழை பெய்யக்கூடாது நிற்க வேணும் ஆண்டவனே என்று கேக்கிறீங்களே!''

செல்வி தொடர்ந்துபெட்டி படுக்கைகளை ஒதுக்கியபடி சமாளித்துக் கொண்டு பதில் சொன்னாள் குழந்தைக்கு, ''அது...அன்றைக்குத் தானே சொன்னேன். இப்ப! இன்றைக்கு! நாம இருக்கிற நிலையில இந்த மழை பெய்யிறத விட பெய்யாம இருக்கிறதே நம்ம முகாமுக்கு நல்லதும்மா''

குழந்தை எதுவும் புரியாமல் விழித்தது தெரிந்ததும் செல்வி அவளுக்குப் புரியும்படியாக சற்று விளக்கமாகச் சொல்வதற்கு முயற்சித்தாள். ''சுதா! நம்ம முகாமில அநேகமாக எல்லா வீடுகளும் எப்படி இருக்கு? எந்த நிலையில இருக்கு? சொல்லு பார்க்கலாம்!''

''வீட்டுக்குள்ள இருந்து பார்த்தா சீட்ல இருக்கிற ஓட்டைகளுக்குள்ளால வானம் தெரியிறமாதிரிஇருக்கு முகட்டில இருக்கிற கம்புகளில இருந்து ஏதோ மாவாட்டம் கொட்டிக் கொண்டிருக்கு'' என்று சுதா மழலை மாறாத மொழியில் சொன்னதும்...

''ம் வெரிகுட்! வெரிகுட்! என்று மகளைப் பாராட்டியபடி தன் பேச்சைத் தொடர்ந்தாள் செல்வி. ''வீட்டுக்கு போட்டிருக்கிற சவுக்குத்தடி எல்லாம் நல்லாவே இறந்து போய்விட்டது. அதனால் தான் ஒரே மாவாட்டம் கொட்டிக் கொண்டிருக்கிறது. ஆறு வருசத்துக்கு முன்னாலே போட்ட தடிகள் அல்லவா! இது மழைக்காலம் தொடர்ந்து பலத்த மழை பெய்தால் இந்த தடிகள் எல்லாம் இன்னும் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கும்? மேலபோட்டிருக்கிற சீட்டுக்கள் கூட அதே ஆறு வருசத்துக்கு முன்னாலே போட்ட தார் சீட்டுக்கள் தான்.

ஏதோ! இப்ப ஒரு வருசத்துக்கு முன்னால ஒவ்வொரு வீட்டுக்கும் ஆறு ஏழு புதிய சீட்டுக்கள் கொடுத்தார்கள். இருக்கும் ஓட்டைகளை மட்டும் அடைக்கச் சொல்லி. அதுவும் மிகவும் அருக்காணி பண்ணிப் பண்ணிக் கொடுத்தார்கள். சாமி வரம் குடுத்தாலும் பூசாரி விடாத கதையாப் போச்சு நம்ம கதை. குடுத்த சீட்டுக்கள் தரமானதா இருந்தாக் கூடப் பரவாயில்லை. ஆறு வருசத்துக்கு முன்னால போட்டிருந்த சீட்டுக்கள விட தரம் குறைந்தது. மூன்றே மாசத்தில பழைய சீட்டுக்கள விட மோசமாப் போச்சுது புதிய சீட்டுக்கள்.

அதனால...இந்தச் சின்ன தூறலுக்கே பார்த்தியா! வீட்டுக்குள்ள எப்படித் தண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறது என்று! இதுவே பெரிய மழையானா என்ன நடக்கும்? வீட்டுக்குள்ள நிறையத் தண்ணீர் வருமா இல்லையா!

அப்பிடி நிறையத் தண்ணீர் வந்தா நாம இருக்க முடியுமா? தூங்க முடியுமா? சமையல் பண்ண முடியுமா! நீதான் இருந்து படிக்க முடியுமா? இல்ல விளையாடத்தான் முடியுமா? இந்த எல்லாத் தேவைகளுக்கும் நமக்கு இருக்கிறது இந்த ஒரு வீடுதானே! நம்ம நிலமையில தானே இந்த முகாமில வாழும் அனேகம் பேர் இருக்கிறாங்க. நாம்படும் கஷ்டத்தைத்தானே அவங்களும் படுவாங்க! அதனால தான் இப்ப இந்த மழை பெய்யிறதவிட பெய்யாம இருக்கிறதே நம்ம முகாமுக்கு நல்லதென்று சொன்னேன்'' என்று ஒரு நீண்ட பெருமூச்சோடு செல்வி தன் பேச்சை முடித்துக் கொண்டதும்...

குழந்தை சுதாவுக்கு இப்பொழுது நிலமை நன்றாகப் புரிந்து விட்டிருந்தது. சற்று நேரம் அமைதியாக இருந்து ஏதோ ஆழமாக யோசித்து விட்டு மீண்டும் கேட்டாள் சுதா.

''அம்மா... உடைந்து போய் விழுந்திருந்த டி.வி. கொட்டில ஒப்பரால தானே திரும்பவும் பெரிசாக் கட்டிக் குடுத்திருக்கிறாங்க. அது மாதிரி ஒப்பரால எங்கள் வீடுகளுக்கெல்லாம் கம்பும்,சீட்டும் போட்டுக் குடுக்கலாம் தானே!''

செல்வி சிரித்துகொண்டே பதில் சொன்னாள். ''அவங்க ஏற்கனவே அவங்களால முடிந்தவரை எங்களுக்கு நிறையவே செய்துட்டிருக்காங்க சுதா!''

குழந்தை ஏதோ நினைத்து விட்டு இடையில் சொன்னாள் ''முகாமில மருந்துகுடுக்கிறதும் ஒப்பரால தானே அம்மா. அன்றைக்கு நம்ம பக்கத்து வீட்டுப் பாட்டிக்கு காய்ச்சல் வந்தபோது அஞ்சு ரூபா குடுத்து பஸ்சில போய் ஆஸ்பத்திரியில அதே மாத்திரைய வாங்கிட்டு வாரதவிட ஒப்பரால குடுக்கிற மாத்திர மேல் என்று சொன்னாங்கம்மா அந்தப் பாட்டி.''

''உண்மைதான் சுதா. அப்பிடி எல்லாம் எங்களுக்கு நிறையவே செய்திட்டிருக்கும் போது எங்கள் வீடுகளையும் திருத்திக் கொடுக்கிறதெண்டால் எத்தனை முகாம் என்று செய்து கொடுக்க முடியும்? அது அவங்களால் முடியாதும்மா'' என்று சொன்னதும்...

''அப்பிடிஎண்டா எங்கள் முகாம் மாதிரியே வேற இடத்திலேயும் முகாம் இருக்காம்மா?''

''நிறையவே இருக்கு சுதா!''

''அந்த முகாம் எல்லாமே நம்ம வீடுகள் மாதிரி ஓட்டையாத்தான் இருக்குமா?''

''பெரும்பாலான முகாமில உள்ள வீடுகள் அப்பிடித்தான் இருக்கும்...''

''அப்ப...அங்கேயும் மழை பெய்யுமா அம்மா?''

''இது மழைக்காலம் அநேகமாக எல்லா இடங்களிலேயும் பரவலா மழைபெய்யத்தான் செய்யும்.''

''ஐயையோ! அப்பிடி எண்டா நிறையப் பேர் பாவம் இல்லையா அம்மா!''

''ம்! உலகத்திலேயே பாவப்பட்ட அகதிகளும், பாவப்பட்ட இனமும் ஈழத்தமிழினமாகத்தான் இருக்க முடியும் சுதா!''

''அம்மா நான் இனி மழையே மழையே வா,வா,வா என்று பாட மாட்டேன்'' என்று ஆதங்கத்தோடு சொன்னாள் சுதா.

'நீ ஏங்கே மழையே மழையே வா வா, வா என்று பாடுகிறாய்? தினம் 'ரெயின் ரெயின் கோ எவே' என்றெல்லோ அதிகமாகப்பாடுகிறாய்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் செல்வி.

அதற்குள் குழந்தை ஓடிப் போய் வீட்டின் முன் தாழ்வாரத்தில் நின்று கொண்டு பாட ஆரம்பித்து விட்டது. ''வெய்யிலே வெய்யிலே வா,வா, வா! மழையே மழையே போ,போ போ!'' என்று தொடர்ச்சியாகப் பாடிக் கொண்டிருந்தாள் சுதா.

அந்நேரம் அந்த ஊரைச் சேர்ந்த இரு தமிழ்நாட்டுப் பெரியவர்கள் அந்த முகாமை ஒட்டிய தெருவழியாகச்சென்று கொண்டிருந்தனர்.

அவர்கள் காதில்குழந்தை சுதா பாடிய பாடல் விழுந்ததும்... இருவரும் குழந்தை அருகே வந்தனர். அதில் ஒருவர் ''பாப்பா! என்ன! பாட்டையே மாத்திப் பாடிட்டிருக்கே! மழையை வேண்டிப் பாடு பாப்பா. மழை பெய்தாத்தான் நாட்டுக்கு நல்லது'' என்றார்.

உடனே குழந்தை அந்தப் பெரியவரைப் பார்த்து ''மழை பெஞ்சா நாட்டுக்கு நல்லதுதான் தாத்தா. ஆனா எங்கள் வீடுகளுக்கெல்லாம் நல்லதா பாருங்க!'' என்று அந்தமுகாம் தொடர் வீடுகளை சுட்டிக் காட்டியவாறு மேலும் சொன்னாள் ''இப்ப இந்த மழை பலமா பெய்தா மழைக்காக நீங்க எங்க வீட்டில கொஞ்சம் ஒதுங்கத்தான் முடியுமா தாத்தா?''

சுதாவின் பேச்சு அவர்களுக்குள் பரிதாபத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்தப் பெரியவர்கள் முகாமின் முகட்டை அண்ணார்ந்து பார்த்தபடி அவர்களுக்குள் மிகவும் அனுதாபித்து பேசிக் கொண்டனர். 'ரொம்ப மோசமாகஇருக்கு வீடுகள் எல்லாம். அதுக நாட்ல எப்பிடி இருந்துக! இப்ப இந்த நிலைக்கு ஆகி போச்சுதுக! அதுகநாட்டில ஏற்பட்டிருக்கிற பிரச்சனை தீர்ந்து அதுக நல்லபடியா சீக்கிரம் சொந்த நாட்டுக்குத் திரும்ப ஆண்டவன் தான் அதுகளுக்கு நல்ல வழியக் காட்டணும்.'' என்று இருவரும்பேசிக் கொண்டிருந்து விட்டு

குழந்தையின் சந்தோசத்துக்காக ''பாப்பா! நீ வெய்யிலே வெய்யிலே வா, வா,வாஎன்றே பாடு பாப்பா'' என்று சொல்லி விட்டு அகன்றனர்.

இவர்களின் சம்பாசனை உள்ளே இருந்த ,செல்வியின் காதுகளிலும் விழுந்தது. செல்வி நினைத்துக் கொண்டாள். துன்பத்தைக் கண்டு இரங்குவது மனிதத் தன்மை அதை நீக்குவதோ தெய்வீகம். நாங்கள் அகதிகளான போது தமிழ்நாடு அன்னையாய் எம்மை அரவணைத்தது மகிழ்ந்தோம். அடிப்படை வசதிகளைச் செய்து தந்து ஆதரித்தது ஆறுதல் அடைந்தோம்.

ஆனால்இப்பொழுதுஇந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடியில் நாமும்தானே சிக்கித் தவிக்கிறோம். அதனாலதான் அரசு கொடுக்கிற உதவிப் பணம் போதாது என்று எங்களில் பலர் ஆண் பெண் ஏன்படிக்க வேண்டிய வயதில் உள்ள பிள்ளைகள் கூட கஷ்டமான வேலைகளுக்குப் போனாலும் எங்களுக்கும் வாழ்க்கைச் செலவுகள் பல விதத்தில் இருக்கு! இந்த நிலையில வீடுகளையும் திருத்திக் கொள்வதென்றால் எல்லோராலும் முடிகின்ற காரியமா? ஆடு, மாடு கொட்டகைகளைக் கூட வருசத்துக்கொரு தடவை அக்கறையோடு திருத்துவாங்க, நாங்கள் மனிதர்கள் ஆறு வருசத்துக்குப் பிறகாவது எங்கள் வீடுகளை அரசு அக்கறையோடு திருத்திக் கொடுக்கக் கூடாதா?'' என்று பலவாறு மனதுக்குள் எண்ணி வேதனைப் பட்டுக் கொண்டிருந்த செல்வியின் காதுகளில்......

''அம்மா ஓடி வாங்க. வெளியே வந்து பாருங்க. மழை போயாச்சு, வெயில் வந்தாச்சு'' சுதாவின் குரல் கேட்டு, வெளியில் வந்து எட்டிப்பார்த்தாள் செல்வி.

இன்று முழுவதும் வருண பகவான் என் ஆசிக்கதை

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் தமிழக மீனவர் வதை: ஆராய பொது நடவடிக்கை

தமிழகக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 1?2 தமிழ் மீனவர்களை சிங்களக்கடற்படை கைதுசெய்து இலங்கைச் சிறைகளில் அடைத்துள்ளது. இதில் 60 பேர் இராமேசுவரத்தை சேர்ந்தவர்கள். 50 பேர் நாகப்பட்டினம் பகுதியைச் சேர்ந்தவர்கள் 12 பேர் கன்னியாகுமரிப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

கச்சத்தீவுப் பகுதியில்மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இவர்களை சிங்களக் கடற்படை பிடித்துச் சென்றுள்ளது.

இவர்களை உடனடியாக இலங்கை அரசு விரைவில் விடுதலை செய்ய தெற்கு ஆசிய தொழிலாளர் அமைப்பு என்.ஜீ.ஓ. அமைப்பு ஆகியவை கோரிக்கை விடுத்து இலங்கையில்உள்ள அமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளன.

உண்மையைக் கண்டறியும் குழு அமைத்து இலங்கைச் சிறைகளில் இந்தியமீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் நடத்தப்பட்ட விதம்-சித்ரவதைகள் பற்றி ஆராயஉள்ளதாகவும் இவ்வமைப்புகள் அறிவித்துள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## தீ (தாய்) தீர்த்தாள்

(அண்மையில் சில அகதி முகாம்கள் தீப்பற்றி எரிந்ததையிட்டு ஓர் தாயின் புலம்பல்)

அங்கே பாரடி
அனலாய் நம் வீடு
இங்கே அகதியாய்
இப்பவும் ஆனோம்
தப்பேதும் செய்யாமலே
தண்டனையாகிப் போனோம்

தண்ணீர் எடுத்து
தனியே வருகையில்
எங்கே என் வீடு
என்றே தேடினேன்
திக்கும் தெரியவில்லை
திசையும் புரியவில்லை
தீயின் நாக்கை விட
வேறெதுவும் காணவில்லை

வேள்வித் தீயினில்
வேகுவது போல-என் மகளே
ஒக்க எம் குடிசை
ஒருநாளில் எரியுமோ
என் மனம் தாங்குமோ

மூன்னிரவு கண் தூங்கையிலும்
கண்டதில்லையடி ஓர் கனவு
இன்றிரவு கண்ணுறங்க
ஏதடி ஏதடி ஓர் நினைவு?

சிட்டுக் குருவிக் கூட்டை
சிறியான்கள் கலைத்தது
போலானால்
சின்னவளே நீ தூங்க
நான் தூளி போடுவதெங்கே?

உன் அண்ணன் தூங்கவென
உன் அப்பன் தந்த மெத்தை
சாம்பல் குவியலாய்
தனியே கிடக்கிறது!

உன் அழகு துலங்குதற்கு
அணிகலனும் செய்து
வைத்தேன்
உண்மையிது பொய்யில்லை
உன்னிடம் மட்டும்
சொல்லுகிறேன்

அகதியாய் இங்கு
ஆரம்பத்தில் வந்தபோது
அலுமினியத் தட்டுடன்
அளித்த பொருட்கள்-இன்றும்
தாயளித்த சீதனமாய்-தங்கமே
உனக்குத் தரவென

ஏழை என்றாலும்
எவர்சில்வர் பாத்திரமும்
எல்லா விதத்திலும்
வாங்கி வைத்தேன்...
தட்டு முட்டுச் சாமானுடன்-
அதுவும்
தவிடு பொடி ஆனதுவே!

சித்தெறும்பாய்சேர்த்தவைகள்
சிதைந்து போனதடி-மகளே
ஷெல்லடி பட்டாலும்-அங்கு
சேதமின்றி இங்கு வந்து
தீயடி பட்டதடி
சிறிதும் மிச்சமில்லையடி!

கூனலாய் முதுகு கோண
கூலி வேலை செய்து
கொஞ்சம் கொஞ்சமாய்ச்
சேர்த்தவைகள்
கருகிப் போகுமென்று-நான்
கனாக் கண்டதில்லையடி!

உழைத்துக் களைத்து வரும்
உன் அப்பன் கண் தூங்க
இடம் பார்ப்பான் கண்மணியே
ஏது நான் இனிச் செய்ய?

ஆ...ஆ...ஆண்டவனே
ஆக்கினை என் செய்தேன்
யார் சோற்றில்
மண்ணிட்டேன்
என் உடைமை மண்ணாக
என்ன பாவம் செய்திட்டேன்
தீயவள் தீர்த்தாள்-அதைத்
தாயவள் நானழுது தீர்பேனோ

இன்னும் சொல்லுவேன்
என்றவள் அழுவாள்...
பக்கத்தில் பார்த்திருந்த
பத்து வயதின் மகள்
போதும் புலம்பியது
இயம்புவேன் கேள்-என்று...

காலையில் கம்பெடுத்து
கல்விக்கூடம்-நீ
அனுப்பவில்லையெனில்

பாழும் நெருப்பினில்-என்
பாடப் புத்தகமும்
பஸ்பமாய் போயிருக்கும்

காத்தாயம்மா காத்தாய்
என் கல்வி ஏட்டை-நீ
காத்தாய்!
கனல்வெந் தீயிலெல்லாம்
கருகி விட்டாலும்
கல்வி ஏடு மட்டும்-என்
கையிலுண்டு-அம்மா
கவலை விடு
படித்திடுவேன்-நான்
படித்திடுவேன்
பட்டங்களும் பெற்றிடுவேன்

மாய்க்கும் தீயை மாய்க்க
மருந்தும் கண்டறிவேன்

K. சுதந்தினி
வாணியாறு அணை
[illegible] முகாம்
தருமபுரி மாவட்டம்

## நாம் ஈழத்தமிழர்

இளைய நிலாவில்
இனி ஒரு புது உலகமைப்போம்
வளைய மறுக்கும் இளைய மனிதத்தை
இனி மறப்போம்

வானில் ஊஞ்சல் கட்டலாம்
மேகத் தலையில் குட்டலாம்
ஜாதியை அள்ளி வீதியோரம் கொட்டலாம்

செல்வா தந்த கொள்கையிலே
சாந்தம் கொள்ளலாம்
போதி மரக் கிளைகளிலே
கூடு கட்டலாம்

பேச மறுத்த மவுனங்களை
சட்டமாக்கலாம்
பேசித் திரிந்த சப்தங்களை
மவுனமாக்கலாம்

வறண்ட ஈழத் தமிழகத்தை
ஒளிமய மாக்கலாம்
வறுமைக் கோட்டினை அழித்து
வளமையாக்கலாம்

வசதி என்பதை அழித்து
சமமாக்கலாம்
பல இனத்தை ஒழித்து
ஓரினமாக்கலாம்

க. ஹேமலதா பிரியதர்சினி
இலங்கை அகதிகள் முகாம், ஆற்காடு.

## யார் வேலி ?

தமிழன் தன்னுணர்வை இழந்து
தமிழ்ப் பண்பாட்டை அழிப்பதோடு
விளக்கைத்தாக்கி இறக்கும்
விட்டில் பூச்சிகளாய் அழிகிறான்!

இந்நிலை... ஏன் எதற்கு?
இனியும் தொடர்தல் வேண்டுமா?
பனிமலரில் மணம் நிலைக்குமா?

உலகில் முதலில் தோன்றியவன்
தமிழன் என்பதை எவராலும்
மறைக்கவோ மறுக்கவோ முடியுமா?

தமிழ் மண்ணிற்கு யார்வேலி போடுவது?
செகமெல்லாம் நமதல்லவா?

கவிஞர் கே. செகநாதன்
சிறுதலைப்பூண்டி-604204.

## தனி ஈழம் மீட்போம்!

பாலையாகிவிட்ட எங்களீழமும்
சோலையாகுமொருநாள்-ஈழம்
சோலையாகும் அந்த நாளே
விலைமதியாத் திருநாள் !
ஈழநாட்டை எங்கள் மண்ணை
இளப்பமாக எண்ணும்
சதிகாரக் கூட்டத்தின்
அதிகார ஆணவத்தை அழிப்போம்!
மாண்டுபோன எங்களீழ சுதந்திரத்தை
மீண்டும் மீட்டெடுக்க எழுவோம்
ஆண்டுகள் பல ஆனாலும் அகத்தில்
என்றும் அச்சம் கொள்ள மாட்டோம் !
ஒரே கொள்கை ஒரே இலட்சியம்
எங்கள் பாதை ஒன்றே
உயிரே அதை கொடுத்தேனும்
தனி ஈழம் மீட்போம் வென்றே!

கவிசுரபி
சுப. சந்திரசேகரன்

## சிரிப்பும் சீரழப்பும்!

(தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடிய போதும், பொங்கல் பண்டிகையைக் கொண்டாடியபோதும் எழுந்த கவிதைகள்)

### தீபாவளி வெடி

தமிழா உனக்குத் தலைத் தீபாவளி !
ஈழத் தமிழனுக்கோ
தலைபோகின்ற தீபாவளி !
சிவகாசி வெடியில் நீ
சிரித்து மகிழ்ந்திருக்க
அமெரிக்க-சீன
அணுவாயுத வெடிகளில்
ஈழத் தமிழரின் தலைகள்
வெடித்துச் சிதறியிருக்கும்!
சிங்கள ராணுவம்
சிரித்து மகிழ்ந்திருக்கும்!
தீபாவளி வாழ்த்தனுப்பி
சிறீலங்காவோடு நீயும்
சிரித்து மகிழ்ந்திடு!

### கோலம்

தமிழா உன் வாசலிலே
வண்ணக் கோலங்கள்!
ஈழத் தமிழன் வாசலில்
பிணக் கோலங்கள்!

(மின்னூர் தமிழ் அகதிகள் கலை இலக்கிய வளர்ச்சிக் கான கையெழுத்துப் பிரதியிலிருந்து)

## நாளை நான் இருந்தால்?

(இந்திய மண்ணில் அடைக்கலம் புகுந்த தன் நண்பனுக்கு ஈழத்துக் காட்டில் வாழும் நண்பன் எழுதியது போல...)

நண்பனே! நீ நலந்தேடி
நாடு கடந்தங்கே...
நாங்களோ இங்கே
காடுகளில் நலம்தேடி
வலம் இடமறியாது
திசை தெரியாது அலைகின்றோம் !
எங்கள் வாழ்வும் வளமும்
திசையறியாது ஓட...
எங்கள் மண்ணில் திசை ஏது?
பகை மிக்கவர்களுக்குப்
பாதைகள் திறந்திருக்கும்
திசைகள் நோக்கி
சிறகடிப்பார்கள்!
இங்கு யுத்த மேகப் பொழிவில்
ஆயுத வெள்ளம் அதிகம்
அறுவடைகளோ அழிவுதான்!
நீருக்காக எச்சிலை விழுங்கிய
நாட்களதிகம்-அன்று
உண்டது செரிக்க
நோன்பிருந்தோம்-இன்று
உணவைத்தேடி நோன்பிருக்கின்றோம்
விடுதலைக்கும்தான்!...
ஜே.ஆரும், பிரேமதாசாவும்
பிடித்த போலிச்
சமாதானக் கொடியை
எங்கள் குருதியில்
சலவை செய்து இன்றும்
வெள்ளைபூசி சந்திரிகா
சிகரத்தில் நட்டுள்ளார்...
மீண்டும் தொடர்வேன்
நாளை நானிருந்தால்!...

-மன்னவன்
(மின்னூர் கையெழுத்துப் பிரதியிலிருந்து)

www.padippakam.com



### புலிகளின் உத்தி மாறியுள்ளது:

# கொழும்பு குண்டு வெடிப்புப் பற்றி பி. பி. சி. வெளியிட்ட தகவல்

15-10-97 அன்று நகரில் மையப்பகுதியில் நடந்த மோசமான குண்டுத் தாக்குதலுக்கு பின்னர் தலைநகர் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழ்ப் புலிகள் என்ற சந்தேகத்திற்கு உள்ளானவர்கள் இன்னோர் வெற்றிகரமான நடவடிக்கையை மேற்கொண்டதை அடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பு பற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன இந்த குண்டு தாக்குதல் நடாத்தப்பட்ட சூழ்நிலை குறித்து கொழும்பில் இருந்து புளோரா பொஸ்ரட்' அவர்கள் அனுப்பிய செய்திக் குறிப்பைத் தமிழில் தருகின்றோம்.

### குண்டுவெடித்தோர் போடும் குண்டு

இலங்கையில் தலைநகரானகொழும்பின் இதயம்என்த் தக்க பகுதியில் பாதுகாப்பை மீறிக் குண்டுதாரிகளால் மீண்டும் ஒரு முறை தாக்க முடிந்துள்ளது. வெடி குண்டுகளால் அடைத்து நிரப்பப்பட்ட 'ட்ரக்' வண்டியை தொடர்ச்சியாக உள்ள பல சோதனைச் சாவடிகளைக் கடந்து நிதி நிறுவனங்கள் பல இருக்கும் இடத்தைக் குண்டுதாரிகள் அடைந்தார்கள். பின்னர், அங்குள்ள சொகுசு ஓட்டல் ஒன்றில் வாகனத்தை நிறுத்துமிடத்தை வந்தடைந்து அங்கிருந்து 'வேல்ட் றெட் சென்டர்' என்று அழைக்கப்படும். உலக வாணிப மையத்தை குறிவைத்துத் தாக்குவது என்பது எதிர்ப்பைக் காட்டும்மிகத் தைரியமான செயலாகும்.

இச்செயல் குண்டை உங்கள் வீட்டு வாசல்படிக்கு எந்த நேரமும் எங்களால் கொண்டு வர முடியும் என்ற செய்தியை இலங்கை அரசுக்கு வழங்குவதாகச் சொல்லலாம். இந்தச் செயலைச் செய்தவர்கள் தமிழ் புலிகள் என்று சந்தேகிக்கப் படுகின்றது.

### புலிகளின் புதிய உத்தி

உண்மையில் புலிகளே இதற்குப் பொறுப்பு எனக் கண்டறியப்பட்டால் அவர்களுடைய் யுத்தியில் ஒரு மாற்றம் காணப்படுகின்றது எனலாம். 1990 தொடக்கம் நடைபெற்ற இவ்வகையான தாக்குதல்களில் இதுவே நீண்டகால இடைவெளி விட்டு நடாத்தப்பட்டுள்ளது. கடைசியாக கொழும்பில் குண்டு தாக்குதல் நடந்தது. 1996ஆம் ஆண்டு ஜூலை மாதமாகும். அப்போது அதே ஆண்டு 'ஜனவரி' மாதத்தில் நடந்த தாக்குதலின் போது பொது மக்கள் பெரும் எண்ணிக்கையினர் கொல்லப் பட்டார்கள்.

ஏனென்றால் அந்தத் தாக்குதல் சகட்டுமேனிக்கு மக்கள் பரபரப்பாக வேலைகளில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில் நிகழ்ந்தன. அந்தத் தாக்குதல்கள் பன்னாட்டுச் சமுதாயத்தில் பரவலான கண்டனத்திற்கு உள்ளாயின. அதன்பிறகு மாதங்கள் செல்ல செல்ல புலிகள் கொழும்பு நகரத்தை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுவார்கள் என்றும் இன்றேல் வெளி நாடுகளில் இருக்கும் தமது ஆதரவாளர்களின் ஆதரவை அவர்கள் இழக்கக் கூடிய ஆபத்து இருக்கின்றது என்றும் கண்ணோட்டக்காரர்கள் 'ஆருடம்' சொன்னார்கள்.

### ஒலிநாடா சொல்லும் சேதி

இந்த வகையில் 15-10-97 அன்று நடந்த தாக்குதலை எதிர்பாராதது என்று கூறலாம். இருப்பினும் தொகையான பல வேறுபாடுகள் தெரிகின்றன. இம்முறை தாக்குதல் நடந்தநாள் பொது விடுமுறை நாள். எனவே வழக்கமாக ஜனசந்தடி மிகுந்து காணப்படும் அந்த இடம் வெறிச் சோடிக் கிடந்தது. இதனால் ஆட்சேத எண்ணிக்கை முந்தய தாக்குதல்களைவிட மிகக் குறைவாகவே இருந்துள்ளது. குண்டு வெடிக்கப் போவதைப் பற்றிய எச்சரிக்கை பதிவு செய்யப்பட்ட ஒலிநாடா சம்பவ தலத்தில் கிடைத்தது என்றும் சில தகவல்கள் கூறுகின்றன.

அந்த ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்ட செய்தியில் பொது மக்களுக்கு ஊறு செய்யும் நோக்கத்துடன் இந்த தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும் கட்டிடங்களை சேதப் படுத்துவதே நோக்கம் என்றும் இந்த ஒலிநாடாவில் கூறப் பட்டிருந்தது. அத்துடன் இந்த தாக்குதலினால் வெளி நாட்டு முதலீடும் இலாபம் தரும் சுற்றுலாத் தொழிலும் அடங்கிய நாட்டுப் பொருளாதாரமே முக்கியமாகப் பாதிக்கப்பட உள்ளது என்றும் அந்த நாடாவில் கூறப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு குண்டுத் தாக்குதலை அடுத்து சுற்றுலாத் துறை இப்போது தான் மெல்ல மீண்டும் தலை தூக்க ஆரம்பித்தது.

### சந்திரிகா கண்டனம்

கொழும்பில் இருக்கும் எங்களுடைய சிங்கள மொழிப் பிரிவின் ஆசிரியர் 'பிரியத் லியனகே' கூடுலான சில தகவல்களை அனுப்பி உள்ளார். 1996ஆம் ஆண்டு 'ஜனவரி' மாதம் நடந்த தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியில் வேலை செய்ய மத்திய வங்கி ஊழியர்கள் மறுத்தார்கள். இருப்பினும் 'வேல்ட்றெட் சென்டர்' எனப் படும் உலக வாணிப மையத்திற்கு அருகாமையில் தான் வங்கிப் பணிகள் நடைபெற்றாக வேண்டுமென்று அதிகாரிகள் வலியுறுத்தினார்கள். இதனை அடுத்துஊழியர்கள் நீதி மன்றத்தில் அரசுக்கு எதிராக வழக்குகூட தொடுத்தார்கள். மேற்படி குண்டுத் தாக்குதலில் அவர்கள் பணி செய்யும் கட்டிடமும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இத்தாக்குதலுக்குப் பின்னர் கைப்பற்றப்பட்ட கட்டிடம் ஒன்றில் இருந்த இரண்டு குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இவை லியனகே தந்த தகவல்கள்.

கொழும்பில் நடைபெற்ற இக்குண்டுத் தாக்குதலை ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க வன்மையாக கண்டித்துள்ளார். இந்தத் தாக்குதலுக்கு ஏதோவொரு பயங்கரவாதக் குழுவே பொறுப்பு என அவர் குற்றம் சாட்டினார். ஆனால் அவர் தமிழ்ப் புலிகளின் பெயரைக் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டவில்லை. தனி நாடு கோரி 14 ஆண்டுகளாக ஒரு கசப்பான போரை நடாத்திவரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிப்படையினர் மீதே சந்தேகப் பார்வை விழுந்துள்ளது. குறைந்தது 18 பேரின் உயிரை காவு கொண்டு 100க்கும் அதிகமானோரைக் காயப்படுத்திய இந்தத் தாக்குதலை தாங்கள் நடாத்தவில்லை என இக் குற்றச்சாட்டைப் புலிகள் மறுத்துள்ளனர்.

# உதயசூரியன் பார்வை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அசைக்க முடியாது என்ற தோரணையில் அட்டகாசமாய் சிரித்துக் கொண்டிருந்தான் ஆதவன்.

''பாத்திங்களா அம்மா நான் பாடினதைக் கேட்டு மழை போயாச்சு வெய்யில் வந்தாச்சு'' என்று குதூகலத்துடன் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த சுதாவைப் பார்த்து சொன்னாள் செல்வி.

''சுதா! வருண பகவான் நல்லவங்க தீயவங்க என்ற வேறுபாடு இல்லாமல் தன் கருணையைக் காட்ற காலம் இது. இந்தநாடு விவசாயநாடு விவசாயத்த நம்பிப் பிழைக்கிற ஏழைகள்தான் இங்கு அதிகம். அந்த ஏழைகளோட கண்ணீர் துடைக்கப்பட்டு நாட்ல மக்கள் எல்லாரும் பஞ்சம், பசி இல்லாமல் வாழ வேண்டும் என்றால் வருண பகவானோட கருணை நம் எல்லோருக்கும் கட்டாயம் தேவை. என்ன செய்வது! எங்கள் வீடுகளின் பரிதாபமான நிலையை வைத்துத் தான் மழை பெய்யிறத விட பெய்யாம இருக்கிறதே நல்லது என்று நான் சொல்லி விட்டேன். உண்மையில் அது தவறு. மழை பெய்தாத்தான் நாட்டுக்கு நல்லது சுதா!''

''வானத்தில தோன்றிய ஆதவன் இன்று எமது நிலையைப் பார்த்து இரங்கின மாதிரி இந்தத் தமிழ் நாட்ல உதிக்கிற உதய சூரியனோட பார்வை எமது இல்லங்களில் விழுந்து இரங்கி இதயம் வைத்தால் எமக்கு இந்த ஓட்டை வீடுகளில் இருந்து விமோசனம் கிடைத்த மாதிரியும் இருக்கும். அரசுக்கும் ஒரு முழுமையான தெய்வீகம் கிடைக்கும்.'' என்று பேசிக் கொண்டே போன செல்வி...

''என்ன சுதா அம்மா சொல்றது புரியுதா?''

''புரியுது அம்மா!''

''என்ன புரியுது?''

''அதாவது அரசு நமக்கு இரக்கப்பட்டு நம்ம முகாம் வீடுகளையெல்லாம் நன்றாக திருத்திக் கொடுத்த பிறகு நான் எப்பவுமே மழையே மழையே வா, வா, வா என்று தான் பாட வேண்டும். அப்படித்தானே அம்மா!''

''சரியாகச்சொன்னாய்.'' என்று குழந்தையை தூக்கி முத்தமிட்டுப் பாராட்டியபடி மீண்டும் வீட்டுக்குள் வந்தாள் செல்வி, ஒதுக்கிய பெட்டிப் படுக்கைகளையும் ஒழுக்குக்கிற்காக வைத்த சட்டிமுட்டி சாமான்களையும் மீண்டும் உரிய இடத்தில் ஒழுங்குப் படுத்துவதற்காக.

---

''ங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று
சங்கே முழங்கு''

—புரட்சிக் கவிஞர்

---

# போரின் காரணமாக முல்லைத்தீவில் உணவுவிநியோகம் அடியோடு துண்டிப்பு

மாங்குளம், ஒட்டி சுட்டான் நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள்யுத்த நிலை காரணமாக இந்த வீதி வழியான போக்குவரத்துகளும், முல்லைத் தீவுப்பகுதிக்கான உணவு விநியோக நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இந்த நிலைமை கடந்த இரண்டு வாரங்களாகத் தொடர்வதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். கடந்த 5ஆம் திகதி இந்த வீதி வழியான வாகனப் போக்குவரத்துக்கள் முழுமையாக துண்டிக்கப்பட்டன. உணவுப்பொருட்களை ஏற்றிச் சென்ற 5 லாறிகளை அதில் சென்ற சாரதிகள் உதவியாளர்கள், உட்பட 18 பேர்களை ராணுவத்தினர் பிடித்து வைத்தார்கள். ஒரு பெண் மணி உட்பட 18 பேரும் இப்போது விடுதலை செய்யப்பட்டு வவுனியாவில் உள்ள சிவில் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதுவரையில் ராணுவத்தினர் வசமுள்ள உணவு லாரிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் முயற்சிகளையும் வவுனியா, முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் மேற் கொண்டுள்ளனர்.

### மக்கள் இடப்பெயர்வு

கனகராயன் குளத்தின் வடகிழக்குப் பகுதிகளிலும், மாங்குளம், ஒட்டிசுட்டான் நெடுஞ்சாலை பகுதிகளிலும். இடம் பெற்று வருகின்ற ராணுவ நடவடிக்கைகள், எதிர்த்தாக்குதல் நிலைமைகளினாலும். ராணுவத்தினருக்கு உதவியாக செல் தாக்குதல்கள், விமானக் குண்டுத் தாக்குதல்தள், ஹெலிக்கொப்டரின் தாக்குதல்கள் காரணமாக இந்தப் பிரதேசம் முழுவதுமே அதிர்ந்த வண்ணம் இருக்கின்றது.

இந்தப் பாதையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சு காரணமாக 8 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பேராறு என்ற பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இடம் பெறும் இந்த நிலைமைகளினால் ஒட்டிசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எஞ்சியிருந்த மக்களும் ஆயிரக்கணக்கில் வெளியேறத் தொடங்கியிருக்கின்றார்கள். இப் பிரதேசத்தில் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் குடியிருந்த கிராம மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள். கிழக்குப்பகுதி மக்கள் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கும், மேற்குக்கரை மக்கள் துணுக்காய், மல்லாவி ஸ்கந்தபுரம் பகுதிகளுக்கும் பாதுகாப்பான இடங்களைத் தேடி நகர்ந்து கொண்டிருப்பதாக, அங்கு இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

புளுமெண்டால்

## தமிழ் பாடசாலை தண்ணீர் குழாய் விஷமிகளால் துண்டிப்பு

கொழும்பு புளுமெண்டால் அரசினர் தமிழ் வித்தியாலய மாணவர் குடிப்பதற்கு பாவித்து வந்த தண்ணீர் குழாய் இனந்தெரியாத சிலரால் இரவோடு இரவாக துண்டிக்கப்பட்டு விட்டது. இதனால் மாணவர் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

அருகிலுள்ள சிங்களப் பாடசாலை மாணவருக்கும் தமிழ் பாடசாலை மாணவருக்கும் பொதுவான ஒரு நீர்க் குழாயே இதுவரை பாவனையில் இருந்து வந்தது.

யாரோ சிலர் நிலத்தை தோண்டி குழாய் வழமையாக இருந்த இடத்துக்கு நீர் செல்லாதவாறு தடுத்து சிங்களப் பாடசாலை வளைவுக்குள் புதிய குழாய் ஒன்றை பொருத்தி அதன் மூலம் தண்ணிரை பாயவைத்துள்ளனர். இதனால் தமிழ் பாடசாலை மாணவர்கள் குடிநீர் பெறமுடியாது தவிக்கின்றனர்.

படிப்பகம்

### பெரும்பான்மைச் சிங்களர்க்கு அநீதிகளாம்

# சிறுபான்மையினர் உரிமைகள் பெறுவதற்கு சிங்கள ஆணைக்குழு கடும் எதிர்ப்பு!

இலங்கையின் கறை படிந்த அரசியல் வரலாற்றில் முக்கிய பங்கினை வகித்தது. வகித்துக் கொண்டிருப்பது பேரினவாதிகளின் சிந்தனையும் அவர்களின் செயற்பாடுகளும் ஆகும். இலங்கையின் தற்போதைய இனப்பிரச்சினையில் முக்கியமான புறத்திரத்தை ஏற்றுக்கொண்டிருப்பது அரசியலில் பெரும்பான்மை மதப் பாரம்பரியத்தின் ஒரு தலைப்பட்சமான தலையீடு எனலாம்.

இலங்கையின் வரலாற்றில் காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே இப்பாரம்பரியம் எவ்வாறான தாக்கத்தை

''பெரும்பான்மை இனத்தின் நிலைபற்றி இப்படிக் கூறுபவர்கள் சிறுபான்மை மக்களின் நிலை எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்பதை உணரவேண்டாமா?''

அரசியலில் ஏற்படுத்தியுள்ளது என்பது இன்றைய இலங்கை பிரச்சினையின் வரலாற்றினை எடுத்து நோக்குகின்ற போது வெளிப்படையாகவே தெளிவாகின்றது.

இலங்கைச் சிறுபான்மை மக்கள் மீதான அடக்குமுறையானது சிலர் கூறுவதுபோல் ஓர் எதிர்பாராத விபத்தாக ஏற்பட்டதல்ல. இந்த அடக்கு முறைகள் ஏற்கனவே நீண்டகால அடிப்படையில் நன்கு திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப் பட்டவையென்பதே சரியானதாகும்.

## புத்தமத ஆதிக்கம்

இலங்கைச் சிறுபான்மை மக்களின் பாரம்பரியமான பிரதேசம், அடிப்படை உரிமைகள், அரசியல் அபிலாஷைகள் போன்றவற்றை வழங்காமல் அல்லது வழங்கவிடாமல் மேலும் பிரச்சினைகளை ஊக்குவிப்பதில் பௌத்தமத ஆதிக்கம் மாபெரும் பங்கினை வகித்துள்ளதென்பதை ஒவ்வொரு புத்திஜீவியும் ஏற்றுக் கொண்டே தீரவேண்டும்

இந்த அடிப்படையிலேயே இன்று இலங்கையில் மற்றொரு இனவாத அலையை சிங்கள ஆணைக் குழுவும், அதன் அறிக்கையும் கிளப்பி விட்டுள்ளதெனலாம். இதே நேரத்தில் இச்சிங்கள ஆணைக்குழுவென்பது இக்காலத்தில் மட்டும் தோன்றிய புதிய விடயமும் அல்ல ஏற்கனவே இலங்கையில் 1954 ஆம் ஆண்டு இதே போன்றதொரு சிங்கள ஆணைக்குழுவையும் அதன் அறிக்கையையும் காணக்கூடியதாக இருந்தது.

## *தரகு முதலாளியச் சிந்தனை*

அன்று சிறுபான்மை மக்களுக்கென சில உரிமைகளை வழங்க சில அரசியல் தலைவர்கள் முன்வந்த வேளையில் அதற்கெதிராக அறிக்கைகளை விட்டதும் சத்தியாக்கிரகங்களை நடத்தியதும் இவ்வாறான ஆணைக்குழுவின் பின்னணியே எனலாம்.

தற்போதைய ஆணைக்குழுவானது இவ்வாறானதொரு சூழ்நிலையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளதை வைத்து நோக்குகின்றபோது ஓர் உண்மை புலனாகும். இதன் ஒரேயொரு நோக்கம் சிறுபான்மை மக்களுக்கு இருக்கின்ற கொஞ்ச நஞ்ச உரிமைகளையும் பறித்தெடுத்து விட்டு அவர்களை அடிமைகளாக வைத்திருக்க வேண்டுமென்ற நவ உள்நாட்டுக்காலனித்துவ தரகு முதலாளித்துவ சிந்தனையை அடியொற்றியதாகும்.

இலங்கையின் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனக் கூறி 1995 ஆகஸ்ட் 5-ஆம் திகதி இவ் அரசாங்கத்தின் தீர்வுப் பொதி வெளியானதும் பாதாளத்தில் இருந்து பூதம் வெளியாவது போன்று 1996 டிசம்பரில் ஏறக்குறைய 56 சிங்கள ஸ்தாபனங்களை உள்ளடக்கியதாக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு எஸ். டபிள்யூ வல்பிட்ட தலைமையில் இச் சிங்கள ஆணைக்குழு மதச் சம்பிரதாயங்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கான முதலாவது சாட்சியத்தை தனது வழமையான பாணியில் கண்டிதலாத மாளிகையின் தியவதன நில்மே திரு நிரஞ்சன் விஜயவர்தன வழங்கி வைத்தாரென்பது குறிப்பிடத்தக்கது

## மீண்டும் வேதாளம்

இவ் ஆணைக்குழுவானது இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று பல அமர்வுகளை மேற்கொண்டு இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திடாரெனக் கூறப்படுகின்ற அனகாரிக

''சிறுபான்மை மக்களுக்கு அரசு ஏதாவது உரிமையை வழங்க முன்வரும் சமயம் சிங்கள ஆணைக்குழு தோன்றுவது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல''

தர்மபாலவின் சிரார்த்ததினமான டிசம்பர் 17ஆம் திகதி இதன் அறிக்கை வெளியிடப்பட்டது. உண்மையில் இது வேதாளம் மீண்டும் முருங்கை மரமேறிய கதை போன்றே காணப்படுகின்றது.

இவ் ஆணைக்குழுவின் அறிக்கையானது இந்நாட்டில் சிங்களவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பக்கம் பக்கமாகக் கூறுவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. மறுபக்கம் இந்நாட்டில் எவ்வளவு தூரம் இனவாதத்தைத் தூண்ட முடியுமோ, இந்நாட்டின் தேசிய அரசியலிலும் பாரம்பரிய உரிமைகளிலும் இருந்து இந்நாட்டுச் சிறுபான்மை மக்களை எவ்வளவுக்கு அந்நியமாக்க முடியுமோ அந்தளவுக்குத் தமது கருத்துக்களை இக்குழு முன் வைத்துள்ளது.

இவ் ஆணைக்குழுவின் அறிக்கையில் முன் வைக்கப் பட்டுள்ள அதன் முடிவுகளையும் விதந்துரைகளையும் சுருக்மாக நோக்குகின்றவிடத்து இவ்விடயம் தெளிவுறுகின்றதெனலாம்.

## பூச்சாண்டி..!

இச்சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையின் முடிவுகளில் பின்வருமாறு குறிப்பிடப்பிட்டுள்ளது: (சுருக்கமான முறையில் வழங்கப்படுகின்றது).

1. நாம் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் சம்பந்தமாக எம்மால் பெறப்பட்ட சாட்சியங்கள் மூலம் புலனாவது யாதெனில் அரசு தனது தீர்வு யோ[illegible] களை அமுல்படுத்துவதால் இலங்கை நா[illegible] முன்னொரு போதும் கண்[illegible]டிராத பெரும் அபாயத்தைச் [illegible]ந்திக்கும் என்பதாகும். இ[illegible]னால் இலங்கை ஒரு சா[illegible]ரண [illegible]மஷ்டி அரசாக மா[illegible]வதற்[illegible]ம் மேலாக உலகத்தில் வேறு எந்[illegible] நாட்டிலும் ஏற்படு[illegible]த்தப் படாத [illegible]றையிலான படு[illegible]யங் கரமான [illegible]ன்று சமஷ்டி அரசொ[illegible] இங்கு [illegible]ருவாகும் [illegible]ன்ப தாகும்.

2. இதன் மூலம் உருவாகும். சமஷ்டி அரசாங்கத்தில் புதிதாகப் பிரித்து வேறாக்கப்படும் 8 அல்லது 9 பகுதிகளின் மீதும் செல்வாக்குச் செலுத்தும் அதிகாரம் மத்திய அரசுக்கு எவ்வகையிலும் கிடையாது. ஜெர்மன் சமஷ்டி குடியரசின் பிராந்தியங்களுக்கு கூட எந்தவிதமான எதிர்ப்புகளுமின்றி இவ்வாறான அதிகாரம் கிடைக்கவில்லை.

3. இதற்கும் மேலாக நம்மை அதிசயத்துக்குள்ளாக்கும் விடயம் என்னவெனில் தமிழ் இனத்தைப் பெரும்பான்மையாக கொண்ட அனைத்து உள்ளார்ந்த அலுவல்கள் சம்பந்தமாகவும் பூரண அதிகாரமுள்ள வடகிழக்கு என்ற பெயரில் அதிகாரம் நிறைந்த மாகாண சபையொன்று உருவாகுவதாகும். பொலிஸ் என்ற போர்வையில் மறைந்திருக்கும் ஆயுதப்படையொன்று கூட அத்திடத்தின் கீழ் அமைந்துள்ளது. மேலும் அம்மாகாண சபை சர்வதேச ரீதியில் ஒப்புக்கொள்ளப்படுவதற்கும் இடமுண்டு. சில நாடுகள் அம் மாகாணத்தை ஒரு தனியரசாகவும் ஏற்றுக் கொள்ள இடமுண்டு.

## மிரட்டலோ மிரட்டல்

4. 1949 இல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (சமஷ்டிக் கட்சி) ஆரம்பித்த நாள் தொட்டு தமிழ் அரசியல்வாதிகளின் முக்கியமான குறிக்கோள்-

தமிழ் ஈழமொன்றை அமைப்பது என்பது இங்கு நாம் மறக்க முடியாததாகும். இத் தீர்வுப் பொதியின் மூலம் நாட்டைத் துண்டாடுவதற்கு அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர்.

5. இந்நாட்டின் தேசிய சமாதானம் ஒருமைப்பாடு என்பனவற்றைப் பாதுகாக்க முயற்சிக்கும் நாம் நாட்டைக் கூறுபோடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றவர்கள் மூலம் செய்ய வேண்டியது இந்த அரசியல் தீர்வுத் திட்டத்தில் மறைந்துள்ள பயங்கரமான விளைவுகள் சம்பந்தமாக பொது மக்களை விழிப்படையச் செய்து உரிய சந்தர்ப்பத்தில் அதற்கு எதிரா[illegible]யாக்குகளை வழங்கி பொ[illegible]து மக்கள் மூலம் பூரணமாக இத்திட்டத்தை நிராகரிப்பதற்கு ஒழுங்கு செய்வதாகும்.

''இலங்கையில் சிறுபான்மை மக்களின் பாரம்பரிய பிரதேசம், அடிப்படை உரிமைகள், அரசியல் அபிலாஷைகள் போன்றவற்றை வழங்காமல் அல்லது வழங்கவிடாமல் மேலும் பிரச்சினைகளை ஊக்குவிப்பதில் பௌத்தமத ஆதிக்கம் மாபெரும் பங்கினை வகித்துள்ளது என்பதை ஒவ்வொரு புத்திஜீவியும் ஏற்றுக்கொண்டே தீர வேண்டும்''

இது போன்ற பல முக்கியமான முடிவுகளை இவ்வறிக்கை முன் வைத்துள்ளதுடன் அதனையொட்டியதாக சிபாரிசுகளையும் முன்வைத்திருக்கிறது. சிங்கள ஆணைக் குழுவினரால் முன் வைக்கப் பட்டுள்ள சிபார்சுகள் வருமாறு.

## சதிவலைகள்...

1. அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தினால் தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கும் சிங்கள மக்களுக்கும் சுயாட்சிக்கும் ஏற்படவிருக்கின்ற படுபயங்கரமான நிலைபற்றி பொது மக்களை விழிப்புறச் செய்வதற்கான செயற்திறன் வாய்ந்த திட்டமொன்றை வகுப்பதுடன் இத்தீர்வுத் திட்டத்தை நிராகரிக்கச் செய்தல்.

2. அரசியல் சாசனத்தின் துணைவிதியில் அடங்குகின்ற விடயங்கள் சிங்கள மக்களுக்கும் வேறு இனப்பிரிவுகளுக்கும் அரசியல் பொருளாதார ரீதியில் மிகவும் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துவதாலும் பௌத்த மதத்தின் அழிவுக்குக் காரணமாக அமையுமென்பதாலும் நாட்டைத் துண்டுபடுத்துமென்பதாலும் இத்தீர்வுத் திட்டத்தை பாராளு மன்றத்தினூடாக நிராகரித்து அமுல்படுத்தாமல் தடுக்க மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்தல்.

3. இலங்கை இதுவரை காலமும் தனிநாடாக இருந்ததை உறுதிப்படுத்துதல் மூலம் அந்த ரீதியில் இருப்பதற்கு உறுதியளிக்க வேண்டும்.

4. இலங்கை நாடானது இங்கு வாழ்கின்ற எல்லா மக்களினதும் தாய் நாடாகையால் அதனது ஒரு பகுதியை ஓர் இனத்துக்கான அல்லது மொழிக்கான பிரதேசமாக பிரிக்க அல்லது உரிமையாக்க முடியாது.

5. எதிர்காலத்தில் கொண்டு வரப்படவிருக்கின்ற அரசியல் யாப்பிலும் தற்போதுள்ள அரசியல் யாப்பில் ( 5 ) ஆவது பிரிவிலும் குறிப்பிட்டிருப்பது போன்று எந்த நபரோ, ஸ்தாபனமொன்றோ அரசாங்கமொன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் செய்யப்படாத ஏற்பாடுகள் எதிர்காலத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

6. அதிகாரப் பரவலாக்கல் மூலம் அல்லது அதிகாரம் பிரிக்கப்படுதல் மூலம் பின்வரும் அம்சங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படாமல் பார்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

1. இலங்கையின் ஒருமைப் பாட்டுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ளல் வேண்டும்.

2. பின்வரும் அதிகாரங்கள் அரசாங்கத்தின் கீழ் எப்பொழுதும் இருக்கவேண்டும்.

1. நிதி, நீதியை நிலை நாட்டல், பொலிஸ்.

2. அரசாங்கக் காணிகள்

3. அனைத்துத் துறைமுகங்கள், இறங்கு துறைகள், விமான நிலையங்கள்.

4. அனைத்து புராதனப் பொருள்கள் நிலையங்கள்.

5. நீதிமன்றப் பரிபாலனம்.

ஆக மொத்தமாக இச் சிங்கள ஆணைக்குழுவின் முடிவுகளையும் சிபார்சுகளையும் வைத்து நோக்குகின்ற போது இக்குழு இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும்; சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுக் காணப்பட்டு அவர்களும் இந்நாட்டில் உள்ள தேசிய இனம் என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்பதை நிராகரித்தே நிற்பதைக் காணமுடிகிறது.

நன்றி : 'வீரகேசரி'

படிப்பகம்

# ஒரு குறளை உணர்வோம்

## ஒருவன் இன்புற மற்றவன் துன்புறுவது அறத்தின் பயனா?

—"அருகேசு"

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"
(திருக்குறள்: 37)

பரிமேலழகர்: அறத்து ஆறு இது என வேண்டா- அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை-சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்.

பயனை ஆறு என்றார். பின்னதாகலின் 'என'என்னும் எச்சத்தால் சொல்லாகிய ஆகம அளவையும், 'பொறுத்தானோடு ஊர்ந்தானிடை' என்றதனால் காட்சி அளவையும் பெற்றாம். 'உணரப்படும்' என்பது சொல்லெச்சம்.

இதனால் பொன்றாந்துணையாதல் தெரிவிக்கப் பட்டது.

மணக்குடவர்: நீங்கள் அறநெறி இத்தன்மைத்து என்று அறிய வேண்டா; சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காணலாம்.

இது, பொன்றினாலும் துணையாகுமோ என்றார்க்குத் துணையாயினவாறு காட்டிற்று.

பரிதியார்: தருமஞ் செய்வோரையும், பாவஞ் செய்வோரையும் விசாரிக்க வேண்டில் அத்தண்டிகைப் பத்தனையும், சுமப்பவர்களையும் கண்டு கொள்க.

காளிங்கர்: உலகத்து அறத்தின்நெறி இத்தன்மைத்து என்று உமக்கு யாம் எடுத்துரைக்க வேண்டியதில்லை; சிவிகையைச் சுமந்தவனோடு மற்று அதன் மேல் ஏறியிருக்கின்றவனுமே சான்று.

டாக்டர் மு.வ: பல்லக்கைச் சுமப்பவனும், அதன் மேலிருந்து ஊர்ந்து செல்வோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூற வேண்டா.

அறம் அனைத்திற்கும் அடிப்படை. அறவழி செல்லுவோனே சிறப்புற வாழ்வான். தான் அழியும் காலத்தும் அழியாத துணையாக நிற்பது அறம் ஒன்று மட்டுமே என்பது திருவள்ளுவரின் அசைக்க முடியாத கொள்கை.

இதனால் அறம் செய்தோன் அதன் பயனாகப் பல்லக்கில் வலம் வருவான் என்றும், அறம் செய்யாதோன் நலம் அழிவான் என்றும் கருதி, இக்குறட்பாவுக்குப் பழைய உரையாசிரியர்கள் அனைவரும் ஒருமித்துப் பொருள் கூறியிருக்கின்றனர்.

அறம் செய்தோன் பெறும் இன்பத்தையும் செய்யாதோன் அதனைச் சுமப்பவனாக உறும் துன்பத்தையும் நூல்களைக் கொண்டல்ல, கண்கூடாகவே காணலாம் பல்லக்குப் பயணத்தில் என்று அதனால்தான் அடித்துச் சொல்கிறார் பரிமேலழகர்.

"அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"

என்ற இதற்கு முன்னுள்ள குறட்பாவுக்கு, "பின்பே அறிந்து செய்வோம் என்னாது முன்பே அறத்தைச் செய்க; அது சாங்காலத்திலும் சாகாதே நின்று பிறக்குமிடத்துத் துணையாம்" என்று பொருள் கூறிய மணக்குடவர் அதை யாரோ ஒருவர் 'அவரே போனபின் அவருக்குத் துணையாவதெப்படி?' எனக் குறை கூறியிருப்பார் போலிருக்கிறது. அதை மனதிற்கொண்டு இக்குறட்பாவுக்கான தனது உரையின் அடியில் "இது, பொன்றினாலும் துணையாகுமோ என்றார்க்குத் துணையாயினவாறு காட்டிற்று" என்று, இப் பல்லக்குக்காட்சியைக் காண்பிப்பதைப் பார்க்கிறோம்.

நல்ல வேளையாக பெரும்பாலும் பழைய உரையாசிரியர்களைத் தழுவியே உரை கூறும் மு.வ. இக்குறட்பாவுக்கு மட்டும் முற்றிலும் மாறுபட்டு "பல்லக்கைச் சுமப்பவனும், அதன் மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூற வேண்டா" என்று சரியான பொருளைக் கூறியுள்ளார்.

ஆம்; பல்லக்கில் ஊர்ந்து இன்புறுவோனும், அதைச் சுமந்து துன்புறுவோனும் அவர்கள் முற்பிறவியில் செய்த அறம் அல்லது பாவச் செயல்களின் பயனாகவே அந்நிலையினை அடைகின்றனர் என்று சொல்லி விடுவது ஆண்டான் அடிமை நிலையை நியாயப்படுத்த திருவள்ளுவரைத் துணைக்கு அழைக்கும் அநியாயமாகும்.

அவரோ, இது அறவழியல்ல என்று அடித்துச் சொல்லியுள்ளார்.

# சுதந்திரம் பெற்று 50 ஆண்டு ஆகின்றன; 25 ஆண்டுகள் அவசரகால சட்ட ஆட்சி!

எமது நாடு சுதந்திரம் அடைந்து எதிர்வரும் பெப்ரவரியில் 50 வருடம் பூர்த்தியாகிறது. இந்த 50 வருடத்தில் 25 வருடங்கள் அவசர காலச் சட்டத்தின் கீழேயே நாடு ஆட்சி செய்யப்பட்டுள்ளது. ஏனைய 25 வருடங்களில் 14 வருடங்கள் யுத்தம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த 50 வருட காலத்தில் நாம் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர், மலாயர் ஆகிய இனங்களுக்கிடையே பல்வேறு பிணக்குகள், கருத்து மோதல்கள் தோன்றியுள்ளன.

இவ்வாறு வெண்தாமரை இயக்க தேசிய ஆலோசகர்களில் ஒருவரும் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபை அமைச்சர்களில் ஒருவருமான ஜோ பெரேரா, நிவித்திகலை சுமன மகா வித்தியாலயத்தில் நிவித்திகலை தொகுதி வெண்தாமரை இயக்கத்தினரால் ஒழுங்கு செய்திருந்த "இனப்பிரச்சினை தீர்வும் அதன் அவசியமும்" என்ற தலைப்பின் கீழ் பேசுகையில் குறிப்பிட்டார்.

### இலங்கையின் சாதனைகள்

இக்கூட்டத்திற்கு தொழில் அமைச்சர் டபிள் யூ. டி. ஜே. செனவிரட்ன தலைமை வகித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் [illegible] எம்மைவிட அபிவிருத்தியடைந்துள்ளன. அந்நாட்டில் இன்று செல்வம் கொழிக்கிறது. ஆனால் எமது நாடு உலகிலேயே மிக புராதன வரலாற்றையுடைய நாடுகளில் ஒன்றாகும்.

பல்வேறு சாதனைகள் எமக்குண்டு. கிரிக்கட்டில் உலக சாம்பியன்கள் நாமே. [illegible] கொலை [illegible] போல [illegible] லும் இன்று [illegible] கொழு[illegible] படைத்துள்ளோம். அதிகமாக மதுபானம் அருந்துபவர்களும் எமது நாட்டிலேயே உள்ளனர். அரசியல் நோக்கங்களுக்காக காணாமல் போவோர் பட்டியலிலும் இலங்கை வரலாறு படைத்துள்ளது. கடந்த காலங்களில் எமது நாட்டிலுள்ள சுமார் 60 ஆயிரம் இளைஞர், யுவதிகள் காணாமல் போயுள்ளனர்.

சிறுவர்களை குற்றச் செயல்களில் ஈடுபடுத்துவதில் எமதுநாடு அபிவிருத்தி கண்டுள்ளது.

### தாங்கமுடியாத யுத்த இடர்

இந்நாட்டு மக்களை இன ரீதியாக பிரித்தாள முற்பட்டதாலேயே இங்கு முடிவில்லாத யுத்தமொன்று ஏற்பட்டது. இந்த யுத்தத்தை மேலும் எம்மால் தாக்குப் பிடிக்க முடியாது. அதனாலேயே இன்றைய அரசு அரசியல் தீர்வு யோசனைகளில் தீவிர கவனம் செலுத்தி இந்நாட்டில் சமாதானத்தை நிலை நிறுத்துவதில் உறுதியாக உள்ளது.

இன்றைய நிலையில் இனவாதிகள், விஷமிகள் மீண்டும் தலைதூக்க முயற்சித்தாலும் அது எடுபடாது. அதனால் மக்கள் அரசின் அரசியல் தீர்வு யோசனைக்கு தமது பூரண ஒத்துழைப்பைவழங்கி, இந்நாட்டில் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்ப முன்வரவேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் ஸ்ரீல. கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ராஜா கொல்லுரே தொழில் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே செனிவிரட்ன உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

# இராணுவத்தினரின் மனித உரிமைமீறல் சம்பவங்கள் அரசு விசாரிக்க வேண்டும்

–அமெரிக்க தூதுவர் சான் டொனலி

இலங்கையின் இனப் பிரச்சினையுடன் தொடர்பிலான மோதலில் சம்பந்தப்பட்ட சகல பகுதியினரும் நீடிக்கக் கூடிய நிலையான அரசியல்தீர்வொன்றை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று இலங்கை மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு அமெரிக்க அரசாங்க சார்பில் நியமிக்கப்பட உள்ள தூதுவர் சான்டொனலி தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல்கள் நாட்டைபாதித்து வருகின்றது. ஆகவே சம்பந்தப்பட்ட சகலரும் நிலையான அரசியல்தீர்வொன்றை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

சான் டொனலி அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனினால் இலங்கைக்கும், மாலைத்தீவுக்கும் அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் நியமனம் அமெரிக்க செனட் சபையின் அங்கீகரிக்கப்பட்டால் இலங்கையிலும் மாலைத் தீவிலுமுள்ள சகல அமெரிக்க பிரஜைகளினதும் பாதுகாப்பை தனது கடமையின் அதிமுக்கிய அம்சமாகக் கருதுவேன் என்றும் அவர் செனட் சபையின் முன் தோன்றியபோது தெரிவித்திருக்கிறார்.

# தமிழுக்கு சம அந்தஸ்து என முழக்கம் ஆனால் அரசு அலுவலகங்களில் புறக்கணிப்பு

தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென பெரும்பான்மையின அரசியல்வாதிகள் பலரும் இன்று மேடைகளில் முழங்கி வருகின்ற போதிலும் பெரும்பாலான அரச திணைக்கள கூட்டுத்தாபனங்களில் தமிழ் மொழி முற்றாகவே புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

மாத்தளை இறத்தோட்டை வத்தேகம பகுதிகளிலுள்ள அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் வைத்தியசாலைகளிலும் தோட்டப்பகுதிகளுக்கு சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள இ.போ.ச. பஸ் வண்டிகளிலும் தமிழ்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதனால் தமிழ் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

அரசாங்கம் தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்து வழங்கியுள்ளபோதிலும் பெரும்பாலான அரச திணைக்கள கூட்டுதாபனங்களில் ஆங்கில மொழிக்கு இரண்டாமிடம் வழங்கப்பட்டு தமிழ் மொழி முற்றாகவே புறக்கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தாய்மொழியான தமிழ்மொழியைக் கூட சிறந்த முறையில் கற்றறியாத தோட்டத் தொழிலாளர்கள் வசித்து வரும் தோட்டப்புறங்களுக்கு சேவையிலீடுபடுத்தப்பட்டு வரும் இ.போ.ச. பஸ்களின் பெயர்ப்பலகைகளில் சிங்கள ஆங்கில மொழிகளில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சிங்கள மொழி தெரியாவிட்டாலும் அவர்கள் ஆங்கில மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்கள் என ஒரு சில அரச அதிகாரிகள் எண்ணுகின்றனரோ என்று ஐயம் ஏற்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# அங்கே தந்தை செல்வா இங்கே டாக்டர் கலைஞர் தமிழினத்திற்காக பாடுபட்ட-பாடுபடும் தலைவர்கள்

**அமைச்சர் திருமதி சற்குணபாண்டியன் புகழாரம்!**
**அகதிப் பெண்களின் நலத்திற்கு உதவ உறுதிமொழி!!**

சென்னையில் ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் சார்பில் நடைபெற்ற தந்தை செல்வாவின் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே தமிழக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சற்குண பாண்டியன் இவ்வாறு குறிப்பிட்டார். மாண்புமிகு அமைச்சர் மேலும் பேசியதாவது :

"ஈழத்துக் காந்தி தென்னாட்டுப் பெரியார் தந்தை செல்வா அவர்களுடைய நூற்றாண்டு விழாத் தொடக்க நாள் நிகழ்ச்சிக்கு என்னை அழைத்துப் பெருமை சேர்த்திருக்கின்ற இந்நிறுவனத்தினுடைய தலைவர் செல்வா அவர்களுடைய அருமை மகனார் திரு. சந்திரகாசன் அவர்களே! இந்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பு ஏற்றுக் இருக்கின்ற அன்பு சகோதரர் ஆற்றல் மிக்க பேச்சாளர் அருகோபாலன் அவர்களே! இந்நிறுவனத்தினுடைய செயலாளர் செல்வி சூரிய குமாரி அவர்களே! இலங்கை நாடாளு மன்றத்தினுடைய முன்னாள் உறுப்பினர் ஐயா கைலாயபிள்ளை அவர்களே! இந்நிறுவத்தினுடைய காப்பாளர் திரு. கோயில்பிள்ளை அவர்களே! இந்நிகழ்ச்சியை சிறப்பிக்க வந்து குழுமி இருக்கின்ற அருமைத் தாய்மார்களே! பெரியோர்களே! மாணவ நன்மணிகளே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்து கொள்கின்றேன்.

சகோதரர் அரு. கோபாலன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது போல இந்நிகழ்ச்சியிலே பங்கெடுத்து கொள்ள வேண்டுமென்று ஒரு நான்கு தினங்களுக்கு முன்பு தான் என்னை சந்தித்து அவர்கள் அழைத்த போது, அவரிடத்திலே என்னுடைய நாட்காட்டியை காண்பித்து இந்த நாளிலே எத்தனை நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்ள இருக்கின்றேன் என்பதைப் பாருங்கள் இதிலே இடைப்பட்ட நேரம் என்று எந்த நேரத்திலே நான் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இன்று காலை முதல் மாலை வரை நிகழ்ச்சி நடைபெறுகிறது. நீங்கள் ஏதாவது ஒரு நேரம் வந்து சென்றால் நலமாக இருக்கும் என்று அவர்கள் கேட்டுக் கொண்ட பொழுது, தந்தை செல்வா அவர்களுடைய நூற்றாண்டு விழா என்ற காரணத்தினாலும் அவருடைய அருமை மகனார் திரு. சந்திரகாசன் அவர்களையும் தந்தை செல்வா அவர்கள் மீது பற்றுக் கொண்டு பாசம் கொண்டு நிகழ்ச்சியிலே பங்கெடுத்து கொள்ள வருகின்ற உங்களைப் போன்றவர்களையெல்லாம் சந்திக்க வேண்டுமென்ற ஆவலுடன் சிறிதளவு நேரமாக இருந்தாலும் கூட இந்நிகழ்ச்சியிலே பங்கெடுக்க நான் வருகின்றேன் என்று அவர்களிடத்திலே ஒப்புதல் நல்கினேன்.

## இருவித நிலை

இன்று மாலையிலே இந்த மண்டபத்திலே நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது என்றும் எனக்காக அரு. கோபாலன் போன்றவர்களும் மற்றவர்களும் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தி கிடைத்தது. உடனே அவசரம் அவசரமாக கோட்டை அலுவலகத்திலிருந்து புறப்பட்டு நேராக இங்கு வந்து சேர்ந்திருக்கின்றேன், வந்து பார்த்தபோதுஉங்களை எல்லாம் பார்க்கின்ற போது ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் மறு பக்கம்வேதனையாகவும் இருக்கின்றது.

செல்வி. சூரிய குமாரி அவர்களை நான் அழைத்துப் பேசிய நேரத்தில் இங்கு வந்திருக்கின்ற அனைவருமே அகதி முகாம்களே இருந்து தான் வந்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட தமிழகத்திலே எழுபதாயிரம் பேர் அகதி முகாம்களிலே இருக்கிறார்கள் எங்களுக்கு பல ஆண்டு காலமாக தமிழகத்து அரசு பல் வேறுவிதமானஉதவிகளையும் செய்து வருகின்றது. என்றாலும் இன்னும் பல உதவிகளையும் பல பாதுகாப்பு நிலைகளையும் பல்வேறு விதமான வாய்ப்புக்களையும் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிக்கின்றோம் என்று சொன்னார்கள். அவர்கள் இங்கு பேசுகின்ற பொழுதும் எந்தளவிலே நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் என்பதையும் எப்படிப்பட்ட கனவெல்லாம் நீங்கள் உங்கள் நெஞ்சிலே தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் இங்கு குறிப்பிட்டுச் சொன்னார்கள். அரசின் சார்பாக குறிப்பாக சமூக நலத்துறையின் மூலமாக நாங்கள் எதைச் செய்ய வேண்டும் என்பதையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

## கலைஞரின் பரிவு

நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டுச் சொன்னது போல் அவசரமாக இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு வேறு சில நிகழ்ச்சிகளுக்கும் செல்லவேண்டும் என்ற நிலையில் நான் வந்த காரணத்தினால் முழுமையாக உங்களுக்கு அரசின் சார்பாக எதைச் செய்ய முடியும் என்பதை தீர்மானமாக சொல்லுவதற்கு இயலாத நிலையில் இருக்கின்றேன் என்பது தான் உண்மையாகும். என்றாலும் நிச்சயமாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு உங்கள் அனைவருக்கும் நன்மைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக உங்களிலே சில பேரை ஊழியர்களாகப் பணிபுரிய ஈடுபடுத்தி அரசின் மூலமாகவும் தொண்டு நிறுவனங்களின் மூலமாகவும் பல உதவிகளை நீங்கள் பெறுமாறு செய்திருக்கின்றார்கள் என்பதையும் அறிந்திருக்கின்றேன்.

மேலும், கல்விக் கூடங்களுக்குச் சென்று கல்வி கற்பதற்கு வாய்ப்பு தடுக்கப்பட்ட நேரத்திலே அந்த சங்கடத்தைப் போக்கி உங்களுக்கெல்லாம் உங்கள் இல்லத்துப் பிள்ளைகளுக்கெல்லாம் படிக்கின்ற வசதியை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார் என்பதை அறிகின்ற போது ஏன் இந்த ஆண்டும் கூட கல்லூரியிலே இதுவரை ஈழத்து மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு இருந்த தடை நீக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிகின்ற போது உங்களுக்கெல்லாம் மனநிறைவாக அனைத்தையும் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் தான் மேலோங்கி நிற்கின்றது.

உங்களில் பலர் பெற்றோருடன் வாழலாம். உங்களிலே பலர் பெற்றோரைப் பிரிந்தும் வாழலாம். உங்களிடம் பலர் சகோதரிகளை குழந்தைச் செல்வங்களை அணைத்தும் வாழலாம். அவர்களை விட்டுப் பிரிந்தும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் உங்களுடைய எண்ணம் முழுவதும் இங்கு தரப்படுகின்ற வாய்ப்பு வசதிகளைப் பெற்றுக் கொண்டு உங்கள் தாயகம் செல்லுகின்ற பொழுது அங்கு அனைவருடன் ஒன்றாகக் கலந்து ஒன்றாகவாழ்ந்து உங்களுடைய வாழ்க்கையை உயர்த்தி காட்டவேண்டும் என்ற எண்ணம் உங்களிடத்திலே மண்டிக் கிடக்கின்றது. எனவே இன்றைக்கு உங்களுக்குத்தருகின்ற வாய்ப்பின் மூலமாக நீங்கள் பெறுகின்ற கல்வி நீங்கள் பெறுகின்ற பயிற்சிகள் அத்தனையும் எதிர் காலத்திலே உங்களுடைய வாழ்க்கையை மேன்மையாக்குகின்ற பொழுது இந்தத் தமிழ் மண்ணிலே தமிழ் பிறந்த மண்ணிலே உங்களுடைய தாயகம் என்று சொல்லக் கூடிய உரிமை படைத்த மண்ணிலே நீங்கள் பெற்ற அனுபவங்கள் உங்களுக்குத் துணையாக நிற்கும். நிற்க வேண்டும் என்பதற்காக இந்தநாட்டை இன்று ஆண்டு கொண்டிருக்கின்றோம் என்று இருந்தாலும் இந்த நாட்டை ஆளுவதற்குரிய வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும் உங்களுக்காக உங்களுடன் இருந்து நன்மை தீமைகளை அனுபவப்பட்டவர்கள் நாங்கள் என்ற காரணத்தினால் உங்களுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கு நிச்சயமாக நாங்கள் துணை நிற்போம் என்பதை இந்நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

## நன்றிக்கடன் பட்டுள்ளோம்

தந்தை செல்வா அவர்கட்கு நூற்றாண்டு நிறைவு விழாவைக் காணக் கொடுத்து வைக்கவில்லை. அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கின்றது. அவர் 77ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்தார் என்று நினைக்கின்ற பொழுது 20 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இருபது ஆண்டுகள் என்பது கொஞ்ச நஞ்ச நாட்கள் அல்ல! கொஞ்சநஞ்ச மணித்துளிகள் அல்ல! ஒவ்வொரு மணிக்துளியும் அச்சம் கொண்டு ஆபத்து எம்மை நெருங்கிடுமோ என்று அவலக் குரல் எழுப்பிய மண்ணிலே தந்தை செல்வா அவர்கள் தமிழ் இனத்து மக்களுக்காகக் குரல் எழுப்பிக் களம் கண்டு சிறை மேற்கொண்டு எவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்கின்றார் என்று நினைக்கின்ற பொழுது தான், அந்த மண்ணிலே இந்த தமிழருக்காக, தமிழ் மொழி பேசுகின்ற நமக்குப் பெருமை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதற்காக தமிழனுடைய மேன்மை அந்த நாட்டிலே குன்றாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, எத்தனை போராட்டங்களை எத்தனை மக்களுடன் இணைந்து நடாத்தி தன்னிலையை நிறுத்தி இருக்கின்றார் என்பதை எண்ணிப் பார்க்கின்ற பொழுது இப்படிப்பட்ட உயர்வான தலைவர்-வழிகாட்டி அந்த மண்ணிலே பிறந்ததற்காக, வாழ்ந்ததற்காக, அவர் வாழ்வாங்கு வாழ்ந்ததற்காக நம்முடைய நன்றியைச் செலுத்தக் கடமைபட்டிருக்கின்றோம்.

## பதவியை துறந்தவர்

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால் பட்டங்கள் பெற்றவர்கள் பாரான வந்தவர்கள் பதவிக்காக எதையும் செய்யத் தயங்காதவர்கள் நாட்டிலே மனித உருவிலே நடமாடுகின்ற காலகட்டத்திலே கூட பதவி எனக்குத் தேவையில்லை என்று நாடாளு மன்றப் பதவியைத் தூக்கி எறிந்தார் என்று சொன்னால் அதைப் போன்ற பண்பு வாய்ந்த ஓர் தலைவர் நம்முடைய தமிழகத்திலே டாக்டர் கலைஞர் தான். அவர்களைப் போல ஓர் தலைவர் வேறு யார் இருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கின்றோம். ஈழத் தமிழர்களுடைய நல்வாழ்விற்காக என்னால் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கின்றேன் என்பதற்காக அவர்களுக்காக என்னால் பணியாற்ற முடியவில்லை என்று சொன்னால் இந்தப் பதவி எனக்கு எதற்கு என்று அன்றைய தினம் எம்.எல்.ஏ. பதவியை துச்சமெனக் கருதி தூக்கி எறிந்தவர் தானே டாக்டர். கலைஞர் அவர்களும்

(12-ம் பக்கம் பார்க்க)

# வெம்பக்கோட்டை முகாமில் கலைமகள் விழா!

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை இலங்கை அகதிகள் முகாமில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம் மற்றும் எம். எம். எஸ். எஸ். எஸ் தொண்டு நிறுவனங்களால் இணைந்து நடத்தப்படும் பாலர் பாட சாலையில் 11-10-97 அன்று கே.எஸ். காளிமுத்து தலைமையில் கலைமகள் விழா நடைபெற்றது.

### பக்திப் பாடகள்

முகாம் பொதுமக்கள், பெற்றோர், மாணவர் மன்றத்தினர், நிர்வாகக்குழுவினர் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் நிர்வாகக்குழுச் செயலாளர் சிவயோக நாதன், ஆசிரியர் சாந்தாபிள்ளை, மாணவர் மன்றத் தலைவர் சுரேஷ்குமார், செயலாளர் K. ரஞ்சித்குமார், பொருளாளர் S. சுகந்தன் மற்றும் J. தீபன், நிதிக்குழுவைச் சேர்ந்த S. சுகந்தினி, N. சிவராணி, R. றெஜிட்டா, R. உதயகுமாரி, A. ஜெயமாலா, M.மகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். K. S. காளிமுத்துவும் முன்னாள் ஆசிரியை திருமதி தனுசாவும் பக்திப் பாடல்களைப் பாடினர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

படிப்பகம்




***யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம் பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. ❀ இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.***

ஆர். கணேஷ்-புதுவை-2.

கேள்வி : இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய நகைச்சுவை எது?

பதில் : இலங்கையில் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் உரிமைக்கும் கவுரவத்திற்கும் அநீதி இழைக்கப்படுவதாக ஒரு நீதிபதியின் தலைமையில் அமைந்த சிங்களக் கமிஷன் கூறியுள்ள புகார்!

பாபு-புதுக்கோட்டை

கே : தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகளை வேறு நாட்டிற்கு அனுப்பும் நோக்கம் இந்திய அரசுக்கு உள்ளதா?

ப : ஐ.நா. அகதிகள் உயர் ஆணையகம் (UNHCR) இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் செயல்பட அனுமதிப்பதே தனது கவுரவத்திற்கு இழுக்கு என்று கருதி மறுத்துவரும் இந்திய அரசு ஒரு போதும் அப்படிச் செய்யாது.

அ. சக்திதாசன்.ஏரல்

கே : ரணில் விக்கிரம சிங்கவின் இந்திய விஜயம் வெற்றியா? தோல்வியா?

ப தமிழர் நல் நோக்கில் பார்த்தால் வெற்றியுமில்லை. தோல்வியுமில்லை!

திருமால்-லெனாவிளக்கு

கே: கொழும்பில் நடந்த குண்டுத் தாக்குதலின் நோக்கம் என்ன?

ப : அத்தாக்கு தலை நடத்தியவர்களே தங்களை யார் என்று பகிரங்கப்படுத்திக் கொள்ளாதபோது, அதன் நோக்கத்தைப் பற்றி நாம் என்ன சொல்ல?

கே : இலங்கைப் படையினருக்கு அமெரிக்கா போர்ப் பயிற்சி அளிப்பதனால் சிங்களச் சிப்பாய்களிடம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

ப : இஸ்ரேலியப் பயிற்சியினாலேயே ஏற்றம் பெறாதார் இதில் எங்கே பெறுவது? பொது மக்களை விட தற்போதையப் போர் எப்போது முடியும் என எதிர்பார்க்கும் முன்னேற்றம் அவர்களிடம் அதிகமாகவே ஏற்பட்டுள்ளது!

கே : அடுத்த தேர்தலில் இலங்கை அதிபர் சந்திரிகா மீண்டும் ஆட்சியைப் பிடிப்பாரா?

ப : இனப் பிரச்சினைக்கான தீர்வை விரைவில் ஏற்படுத்தி, போருக்கு முடிவு கட்டினால் வாய்ப்பு உண்டு!

கே : சமரசப் பேச்சு வார்த்தைக்கு புத்த பிக்குமார் தங்களையும் சம்பந்தப் படுத்திக் கொள்வார்களா?

ப : பௌத்த சிங்கள வரைத் தவிர, வேறு இனம் இலங்கையில் இல்லாமல் இருப்பதெனில், அத்தகைய சமரசத்திற்கு அவர்களே முன்னிற்பார்கள்!

கே: இலங்கை அரசிற்கு ஆதரவாக இருக்கும் தமிழர் அமைப்புகளின் பங்கு காலப் போக்கில் தமிழர் விடுதலைக்குச் சாதகமாக இருக்குமா? பாதகமாக அமையுமா?

ப : தமிழினத்தில் ஒற்றுமையிருந்தால் இக் கேள்விக்கே இடமிராது. அந் நிலை தான் சாதகமே யொழிய, மற்றதெல்லாம் தமிழர் விடுதலைக்குப் பாதகமானது தான்!

கே: விடுதலைப்புலிகள் தவிர, வேறு தமிழ் அமைப்புகளுக்கு இலங்கை அரசு மற்றும் கட்சிகள் கொடுத்துள்ள மரியாதை என்ன?

ப: வைக்கோல் கன்றுக் குட்டிக்கு பால்காரன் என்ன மரியாதை கொடுப்பானோ அது!

K.A. மஸ்தான்-கமுதி

கே : தமிழருடனான சமரசப் பேச்சு வார்த்தையையே இலங்கைக்குக் கேடானது என்று சாடும் சிங்களக் கமிஷனுக்கு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஒருவரே தலைமை தாங்குவது எதைக் காட்டுகிறது?

ப : தமிழினத் துவேசத்தில் சிறீலங்காவின் நீதித் துறையும் விலக்கல்ல என்பதை!

N.R. காந்தி-கோபி

கே : தமிழனுக்குத்தலைக் குனிவு ஏற்படுத்திய சம்பவம் என்று எதைக் குறிப்பிடலாம்?

ப : தமிழ்ப் போராளிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கும் அறிவிப்பு வெளியாக ஒரு தமிழன் (லட்சுமண் கதிர்காமர்) உதவியதை!

செ. வரதன்-ஆவடி

கே: கொடிய மிருகத்தை விடக் கேவலமாக வேட்டையாடப்பட்டும், இழிவாக நடத்தப்பட்டும் கொழும்பில் தங்க தமிழன் போட்டி போடுவது நிற்கவில்லையே ஏன்?

ப : இலங்கையை விட்டு வெளியேறுவதானாலும் வெளியே இருந்து ஈழத்திற்குச் செல்வதானாலும் கொழும்புக்கு வர வேண்டியதைத் தவிர்க்க முடியாத தாக்கி, தமிழனின் மானத்திற்கே சவால் விட்டுக் கொண்டிருக்கும் சிங்கள ஆட்சி முறைதான் காரணம்! போதாததற்கு புலிகளும் தங்களுக்கு ஆகாத தமிழர்களையெல்லாம் கொழும்புக்குச் சென்று குடியேறும் நிர்ப்பந்தத்தை உருவாக்கி வருகிறார்கள்.

# அமைச்சர் சற்குணபாண்டியன் உரை...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்முடைய பேராசிரியர் அவர்களும் எனவே அந்த உணர்வு இன்றைக்கு நம்மை எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கின்றது என்று சொன்னால் மிகையல்ல.

## கொள்கைக்காக சிந்திய குருதி

தந்தை செல்வா அவர்கள் 56ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற திரு. பண்டாரநாயக்கா அவர்கள் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியென சட்டம் இயற்றிய பொழுது அச்சட்டத்தினை எதிர்த்து கொழும்பு கால்முகத் திடலில் காந்தீய முறையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு ரத்தம் சிந்தத் தாக்கப்பட்டார். ஆனால் தமிழர் எதிர்த் தாக்குதலில் ஈடுபடாமல் அவர் பார்த்துக் கொண்டார் என்று அவருடைய வாழ்க்கை வரலாற்றிலே இருக்கின்ற அந்த வாக்கைப் படித்த பொழுது என்னையும் அறியாமல் நான் கண்ணீர் மல்கி விட்டேன். காரணம் இந்தத் தமிழகத்திலே கூட ஆட்சி மொழிச் சட்டத்தை எதிர்த்து சட்ட நகலை எரித்துச் சிறை சென்றனர் டாக்டர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் கிட்டத் தட்ட 20 ஆயிரம் பேருக்கு மேல் சிறை சென்றோம். அன்றையத் தினம் நானும் சிறை சென்றேன்.

மகளிர் அணியைச் சார்ந்தவர்கள் என்னுடன் கிட்டத் தட்ட 200 பேருக்கு மேல் கைதானார்கள். எத்தனை ஆண்டுக்காலம் சிறைத் தண்டனை என்பது அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு சட்ட விதிகள் இருந்த போது எத்தனை நாட்கள் ஆனாலும், எத்தனை மாதங்கள் ஆனாலும், எத்தனை ஆண்டுகள் ஆனாலும், இந்தப் போராட்டத்திலே எங்களை இணைத்து கொள்வோம் என்கின்ற அந்த நிகழ்ச்சியும் இன்றைக்கு நினைவு வருகின்றது.

## பார்க்கிற இடமெல்லாம் தமிழ் பரவ வேண்டும்

ஆட்சி மொழி தமிழாகத் தான் இருக்கவேண்டும் என்று தமிழகத்திலே நாங்கள் போராடிக்கொண்டிருந்ததைப் போல அந்த மண்ணிலே தமிழும்ஆட்சிமொழியாகட்டும என்பதற்காக இரத்தம் சிந்திய தந்தை செல்வா அவர்களை இன்றைக்கு நாங்கள் மனதார எண்ணி உருகுகின்றோம். அது மட்டுமல்ல 'ஸ்ரீ' என்ற சிங்கள எழுத்தை எல்ல வாகனங்களிலும் எழுத வேண்டுமென்று முயற்சித்த நேரத்தில் அதை 'ஸ்ரீ' என்று தமிழிலே பொறிக்கும் போராட்டத்தை தந்தை செல்வா அவர்கள் வெற்றிகரமாக நடாத்திக் காட்டினார்கள் என்பதை அறிகின்ற பொழுது ''வெறும் சொல்லளவிலே சொல்லிலே மட்டும் தமிழ் நிகழ்ந்தால் போதாது! ஒவ்வொருவருடைய உள்ளத்திலே மட்டும் தமிழ் மொழி ஏற்றமுற்றால் போதாது; பார்க்கின்ற இடமெல்லாம் தமிழ் பரவ வேண்டும்'' என்று சொன்ன அந்தப் பாரதியினுடைய கூற்றை நனவாக்குவதிலே தந்தை செல்வா அவர்கள் தீவிரம் காட்டியதையும் எண்ணிப் பார்த்து நாம் நெஞ்சம் உருகுகின்றோம்.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் திருமதி சற்குண பாண்டியன் பேசினார்

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# தமிழர் நெஞ்ச வினாவும் சந்திரிகா திட்டமும்

**ரவிபெர்னார்ட் :** சந்திரிகா முன் வைக்கும் புதிய அரசியல் திட்டம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

**சா. செ. சந்திரகாசன் :** ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை இன்றைக்கு அவர்களுக்கு நடந்து கொண்டிருக்கின்ற சம்பவங்களை-இன்னல் இடுக்கண்களை உணர்ந்து அவற்றின் தீர்வுக்கு யாராவது முயல்கிறார்கள் என்று எண்ணக் கூடிய நம்பிக்கையே இல்லாத சூழ்நிலை.

காரணம் வடக்கு கிழக்கிலே இருக்கின்ற எந்தவொரு தமிழனுக்கும் பாதுகாப்பில்லை. இன்றைக்கு காலையில் பள்ளிக்குப் புறப்படுகின்ற ஒரு தமிழ்க்குழந்தை உயிரோடு மாலையில் வீட்டுக்கு வருமா என்ற கேள்விக்குறியோடு அந்தரிக்கின்ற தாய்மாரும், சாதாரணப் பயணத்தை மேற்கொள்பவர்கள் கூட திரும்பி வருவார்களா என்று குடும்பத்தினரும் பயப்படுகின்ற சூழ்நிலை.

ஒரு பக்கத்திலே விமானங்கள் மூலம் குண்டு வீச்சு. மறு பக்கத்திலே 'ஷெல்' என்று சொல்கிறார்களே பீரங்கிகள் மூலம் இடைவிடாத அந்த ஷெல் வீச்சு. எந்த நியாயமுமில்லாமல் தமிழன் என்கிற ஒரேயொரு காரணத்திற்காக நாளாந்தம் ஆயிரக்கணக்கானோர் உயிர் உடைமைகளை இழக்கின்ற சூழ்நிலை.

இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது இந்தப் பின்னணியில் சந்திரிகா வைக்கின்ற தீர்வு நல்லெண்ணத்துடன் வைக்கப்படுகின்றதா என்பது முதல் கேள்வி. இரண்டாவதாக அப்படித்தான் ஒரு தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட்டாலும் இப்படியே போரை நடத்திக்கொண்டு தமிழர்களைப் படுகொலை செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அதை வைப்பதாக இருந்தால், இதை நம்பி நாங்கள் போராட்டத்தைக் கைவிட்டு அதனை ஒத்துக் கொள்வதா என்ற கேள்வி.

இவைதான் எல்லா ஈழத்தமிழர் மனங்களிலும் இன்று எழுந்து நிற்கின்றன.

-விஜய் தொலைக்காட்சி நேர்முகம் நிகழ்ச்சியில் 16-11-97

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN No. 14, Sait Colony 1st Street, 3rd Floor, Egmore, Chennai-600 008
Printed at Kuralneri Achagam, Chennai-94

சனநாயகம்-சமதர்மம்-சமயசார்பின்மை-நமது பாதை